
# பைலட் பேனாக்களை

## மாணவ எழுத்தாளர்களுக்கு
## பரிசாக அளிக்க
# ஆனந்த விகடன்
## தேர்ந்தெடுத்திருக்கிறது

ஆனந்த விகடனில் கட்டுரை எ( பைலட் பேனாவைப் பரிசாகப் பெற்ற மாணவர்களுக்கு பைலட் கம்பெனியாரின் மனமார்ந்த வாழ்த்துக்கள். இப் புதிய பேனாவின் மூலம் வருங்காலத்தில் அவர்கள் மென்மேலும் வெற்றியடைவது நிச்சயம். ஏனெனில் பைலட் பேனாவினால் எழுத ஆரம்பித்துவிட்டால் உற்சாகமும், ஊக்கமும் குறைவதே இல்லை.



TRADE MARK

**பைலட் பென் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.,**

*நிர்வாக ஆபீஸ்:*
கத்தோலிக் சென்டர்,
அரமனைக்காரன் தெரு,
மதராஸ்–1.

*ரிஜிஸ்டர்டு ஆபீஸும் தொழிற்சாலையும்:*
கதிர்வேடு கிராமம்,
பொள்ளல் போஸ்ட்,
செங்கல்பட்டு ஜில்லா.

*விற்பனை மற்றும் ஸர்வீஸ் செய்பவர்கள்:*
மெஸர்ஸ் ஜெம் & கம்பெனி, 325-26, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, மதராஸ் – 1.

# ஆலவாய்

## நுழை வாசல்

இந்த நெடுங்கதைச் சோலைக்குள் செல்ல ஒரு நுழை வாசல் அவசியம் என்று கருதி இதனை எழுதுகிறேன்:

எந்த நாட்டு வரலாற்றை எடுத்துப் படித்தாலும், அதன் ஒவ்வொரு காலத்தில், ஒவ்வோர் அரசு உதயமான செய்திகள், விந்தைக்குரிய தன்மையுடன் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

உதாரணமாக, நமது தலைமுறையினர் நேரில் கண்டு அறிந்த அம்மாதிரி வரலாறொன்றையே எடுத்துக் கொள்வோம்: இருநூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கில அரசின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த நமது பாரத நாட்டில், அந்நிய ஆட்சி ஒழிந்து ஒரு புதிய சுதந்திரக் குடியரசு உதயமான போது, அதன் சரித்திர உருவம் என்ன கம்பீரமாக—எத்தனை வியப்புக்குரியதாக—எவ்வளவு இனிமையாக இருந்தது!

ஒரு பேரரசு அழிந்து மற்றொரு பேரரசு உதயமாகும் வரலாறு, உலகின் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் ஒரே விதமாகவே அமைவது இயற்கை போலும்! நம் பண்டைத் தமிழக வரலாறும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

போதுமான ஆதாரங்களுடன் தொகுக்கப் பெற்றுள்ள ஓர் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளின் தமிழக வரலாற்றை விரித்துப் பார்த்தால் அதிலே மூன்று பேரரசுகள் அழியாப் புகழுடன் ஒளி வீசி நிற்பதை அறியலாம். ஒன்று, பல்லவப் பேரரசு; மற்றொன்று, சோழப் பேரரசு; பிறிதொன்று பாண்டியப் பேரரசு. பல்லவப் பேரரசை நிர்மாணித்தவன் சிம்ம விஷ்ணு; அது சுமார் நானூறு ஆண்டுக் காலம் தமிழகத்தில் தன்னிகரற்ற அரசாய் விளங்கி, அபராஜித பல்லவன் காலத்தோடு அழிவுற்றது. அதன்பின் சோழப் பேரரசை உதயமாக்கினான் விஜயாலய சோழன் என்பான்; அந்த அரசு சுமார் முன்னூறு ஆண்டுக்காலம் நானிலமெங்கும் புகழ் பரப்பி, மூன்றாம் இராஜராஜ சோழன் காலத்தோடு முடிவுற்றது. பிறகு பாண்டியப் பேரரசை உதயமாக்கினான் மாறவர்மன் சுந்தர பாண்டியன்; அவன் கண்ட பேரரசு சுமார் நூறு ஆண்டுகள் வரை மகோன்னத கீர்த்தியுடன் திகழ்ந்து, கி. பி. பதினான்காம் நூற்றாண்டோடு சரிந்து விட்டது. அதோடு தமிழகத்தில் பேரரசு சகாப்தமும் முற்றுப் பெற்றது.

இந்த முப்பேரரசுகளின் உதய வரலாறுகளையும், அவற்றை உருவாக்கிய வீர புருஷர்களின் வரலாறுகளையும் படிக்கும்போது, நம் உள்ளம் சிலிர்க்கிறது; உடல் வீறு கொள்கிறது; சிந்தை உருகிக் களிக்கிறது; புதுத் தெம்பும் புதுப் பலமும், புதிய உணர்ச்சியும் பொங்கிப் பிரவகிக்கின்றன. இத் தன்மை வாய்ந்த ஒரு பேரரசின் உதயகால வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த 'ஆலவாய் அழகன்' என்னும் பெருங் கதையை உருவாக்கி யிருக்கிறேன்.

# அழகன்

## ஜெகசிற்பியன்

'ஒரு நாட்டின் இறந்த கால வரலாற்றை எண்ணிப் பார்க்கும் அதன் மக்களால்தான் அந் நாட்டின் எதிர்கால வரலாற்றைச் சிறப்புற அமைக்க முடியும்' என்னும் கொள்கை உடையவன் நான். எனவேதான், இந்தக் கதையைப் பெரு முயற்சி எடுத்து எழுதத் துணிந்தேன்.

முதற் சங்க காலம் முதல் கடைச் சங்க காலம் வரை தமிழகத்தில் பேரரசு அந்தஸ்து பெற்றுப் பெருஞ் சிறப்புடன் விளங்கியது பாண்டிய நாடே. அக் காலத்தில்தான் தமிழ் மொழி வளர்ந்து, சங்க இலக்கியங்கள் உருவாகி, சமய நெறி தழைத்து, கலை-நாகரிகம் சிறந்தோங்கி ஒளிர்ந்தன தமிழகத்தில்.

கி. பி. மூன்றும் நூற்றுண்டோடு இந்தப் பாண்டியப் பேரரசு வீழ்ந்து பட்டது. அதன்பின் அப் பாண்டிநாடு களப்பிரர் என்னும் அந்நிய இனமொன்றின் கைப் பாவையாகவும், பிறகு பல்லவப் பேரரசின் விளையாட்டுப் பொம்மையாகவும், அப்புறம் சோழப் பேரரசின் சதுரங்கக் காயாகவும் சிக்கிச் சொல்லொணுத் துயர்களை அநுபவித்து வந்தது. நாடும், அரசுரிமையும் இருந்தும், அதனுல் நகர்ந்து முன்னேறித் தலை தூக்கிப் பழைய நிலையை அடையவே முடியாமல் ஒடுங்கி முடங்கிக் கிடந்தது.

சுமார் ஆயிரம் ஆண்டுக்காலமாக இப்படி நலிந்து கிடந்த அந்நாட்டில், விடிவெள்ளியெனத் தோன்றினுன் ஒரு வீர இளைஞன். கி. பி. 1216 முதல் கி.பி. 1238 வரை பாண்டி நாட்டின் முடி மன்னனுகத் திகழ்ந்து, சோழப் பேரரசை வீழ்த்திப் பாண்டியப் பேரரசை உதயமாக்கிய அந்த மாவீர இளைஞனின் பெயர் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பதாகும்!

அந்தப் பேரரசனிடம் குடிகொண்டிருந்த அரசியல் ஞானமும், வீர உணர்ச்சியும், விவேக சிந்தையும், அறநெறிப் பண்பும், இறை பக்தியும், தமிழ்ப் பற்றும் சேர்ந்துதான் ஒரு பேரரசை வீழ்த்தி, மற்றெரு பேரரசை உதயமாக்க உதவின எனலாம். அச் சரித்திர நாயகனைக் கதா நாயகனுகக் கொண்டே இந்த 'ஆலவாய் அழகன்' உதயமாகி இருக்கிருன். இக் கதையில் வரும் நான்கைந்து பாத்திரங்களைத் தவிர, மற்றெல்லாப் பாத்திரங்களும் அந்தப் பாண்டியப் பேரரசின் உதயகால வரலாற்றில் இடம் பெற்றிருப்பவையே. அப்பாத்திரங்கள் ஒவ்வொன்றும் இன்னின்ன குண விசேஷங்கள் கொண்டவை என்பதை மட்டுமே நான் இந்தக் கதையில் கூற முயன்றிருக்கிறேன். அத்துடன், அப்பாத்திரங்களில் சிலவற்றை ஒரு மாபெரும் இலட்சிய வட்டத்தினுள் ஓட விட்டிருக்கிறேன். அவ் வட்டம் என்ன என்பதை வாசக நேயர்கள் அறிந்து கொண்டால் நான் இக்கதையை எழுதிய தன் பயனை அடைந்தவனுவேன்.

— ஜெகசிற்பியன்

## அத்தியாயம் ஒன்று

# சோனக வணிகனின் தங்கை

பூமருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப
நாமருவிய கலைமடந்தையுஞ் சயமடந்தையு நலஞ்சிறப்ப..."

— மெய்க்கீர்த்தி.

கொற்கை நகர் கீழ்க்கரையில், குமரிக் கடல் ஆர்த்தெழுந்து தன் அலைக்கரங்களால் வெண்ணுரைகளை வாரியிறைத்தபடி பேரிரைச்சலிட்டுக் கொண்டிருந்தது. பகலின் ஒளி குன்றி இரவின் கருமை ஏறயேற அதன் வெறியார்ப்பாட்டம் வீறு கொண்டது. வானத்தில் குன்றுகளையொத்த கரிய மேகங்கள் அசுரப் பிரயாணம் செய்து கொண்டிருந்தன. அவற்றின் இடிமொழிகளும் மின்னற் சிரிப்புகளும் குமரிக் கடலுக்குப் போதையூட்டின. அதனால் அந்த ஆழ்கடல் பெருமளவில் குமுறிக் கொந்தளிக்க ஆரம்பித்தது.



மாறோக மண்டிலம் என்னும் தென்பாண்டி நாட்டின் துறைமுகப்பட்டினமாகவும், பாண்டி நாட்டின் இரண்டாம் தலைநகராகவும்விளங்கிய கொற்கை, இன்று பொலிவிழந்து மங்கிக்காணப்பட்டது. அந் நகரின் வானுயர்ந்த மாட மாளிகைகளும், கொண்டல் முட்டும் கூட கோபுரங்களும் இருள் சேற்றில் அழுந்திக்கிடந்தன. அவற்றைத் தொலைதூரத்திலிருந்து பார்க்கும்போது, கரிய பெரிய யானைகள் பனி மூட்டத்திற்கிடையே அமர்ந்து துதிக்கைகளை உயர்த்தித் தவம் இயற்றிக் கொண்டிருப்பன போல் தோற்றமளித்தன.

இப்படியிருந்த அந்நகரின் தென் திசையில், நீலக் கடலின் நீள்விசும்பைப் பார்த்தவாறு நின்றிருந்தது ஒரு பெரிய பௌத்த விகாரம். சீமாற சீவல்லப பரசக்கர கோலாகலன், பாண்டிய அரசு கட்டில் வீற்றிருந்த போது, கடாரத்து இளவரசனை மங்கலவர்மன் என்பான் அவனிடம் வந்து அநுமதி பெற்று அழகுற நிர்மாணித்த பௌத்த விகாரம் அது. அதனுள் எங்கோ ஒரு மூலையில் எரிந்துகொண்டிருந்த விளக்கின் ஒளி இருளரக்கியின் நெற்றித் திலகம் போல் மினுக்கியது.

அந்த விகாரத்தில் பௌத்தத் துறவிகள் மாரிக் காலங்களில் வந்து தங்கி, சாதுர் மாசம் எனப்படும் அறிவு வேள்வி நிகழ்த்துவது வழக்கம். இப்போதும் அப்படித்தான் அங்கே, 'சாதுர் மாசம்' நடந்து கொண்டிருந்தது. உபதேசங்களின் இடையிடையே இளந் துறவிகள் சேர்ந்து பாடும் இனிய கீதங்களின் ஒலி தொலைதூரம் வரை மெல்லோசையாகக் கேட்டது.

பௌத்த விகாரத்தின் வடதிசையில் —

பாண்டிய அரசின் பொக்கிஷத்தை நாள்தோறும் பொன்னாலும் மணியாலும் நிறைத்து வரும் முத்துச் சலாபத் துறை அமைந்திருந்தது. அதன் கரையோர மணல் வெளியில், பல தேசத்து வணிகர் பெருமக்கள் வந்து கூடாரம் போட்டுத் தங்கியிருந்தனர். அந்தக் கூடாரங்களுக்குச் சற்று அப்பால் ஒரு பெரிய மாளிகை தென்பட்டது. முத்துச் சலாபத்தைக் கண்காணிக்கும் அதிகாரியும், நாணயச் செலாவணி அதிகாரியான பொன்வாரியமும், உப்பளத்தை நிர்வகிக்கும் உப்புவாரியமும், கடல்வழி வரும் பொருட்களுக்குத் தீர்வை விதிக்கும் உல்கு (சுங்க) வரி அதிகாரியும் தங்கியிருப்பதற்கென அமைந்த மாளிகை அது.

முத்துக்குளிப்புத் துறையோரம் 'முனையெதிர் மோகர்' என்னும் பாண்டியப் படைவீரரில்! சிலர் ஆயுதபாணிகளாய் நின்று காவல் காத்துக் கொண்டிருந்தனர். இரவு நேரத்தில் யாராவது கள்ளத்தனமாக முத்துச்சலாபம் செய்துவிடாமல் கண்காணிக்கவே அந்த வீரர்கள் அங்கு விழிப்போடு உலாவிக் கொண்டிருந்தனர்.

பாண்டிநாட்டின் மேலைத் துறைமுகப் பட்டினமான தொண்டியைவிட இந்தக் கொற்கைத் துறைமுகம் மிகப் பெரிதாகையால், அதன் கலங்கரை விளக்கமும் நெடிதுயர்ந்து நீலவானை முட்டிக்கொண்டு நின்றது. அந்தத் தீபஸ்தம்பத்தின் குடுமியில் எரிந்து கொண்டிருந்த பெரிய விளக்கின் ஒளி, துறைமுகத்தில் மிதந்து நின்ற பல நூறு நாவாய்களின் மீதும் பறந்து கொண்டிருந்த பலவிதக் கொடிகளில் பாய்ந்து தெறித்தது.

துறைமுகத்தின் மேற்கே, நகரின் வலப்புறத்தில், உயர்ந்த மதில்களுக்கும் பசுஞ்சோலைகளுக்கும் மத்தியில் அமைந்திருந்தது ஓர் அரண்மனை. அது மிகப் பழமையும் சிறப்பும் வாய்ந்த அரண்மனை. பாண்டி நாட்டின் முதல் தலைநகரான மதுரையில், அரசோச்சும் மன்னரின் அரண்மனை இருந்தது; பாண்டிய இளவரசர்கள் வசிப்பதற்கென கொற்கை நகரில் இந்த அரண்மனை அமைக்கப் பெற்றிருந்தது. இளவரசன் பாண்டிய அரசனாக முடிசூட்டிக் கொள்ளும் வரை இந்த அரண்மனையிலேயே வசித்து வர வேண்டும் என்பது நீண்டகால வழக்கம். * ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஊழ்வினையால் கண்ணகிக்கு இடர் விளைத்து உயிர் துறந்த பின்னர், கொற்கையிலிருந்த இளவரசனாகிய வெற்றிவேற் செழியன் மதுரைமா நகரத்திற்குச் சென்று முடிசூட்டிக் கொண்டான் அல்லவா? அந்த வழக்கம் இதுவரை அறுபடாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.



ஆம்; இன்றையப் பாண்டிய மன்னனான முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் மதுரை அரண்மனையில் இருந்து வருகிறான். அவனுடைய தம்பியும் இளவரசனுமான முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இந்தக் கொற்கை நகர் அரண்மனையில் குடியிருந்து வருகிறான்!

இவர்களது தந்தையான மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலஞ்சென்று இருபத்துநான்கு ஆண்டுகளாகி விட்டன. அது முதல், மூத்தவனான குலசேகர பாண்டியனே முடிமன்னனாக மதுரையில் வீற்றிருந்து கோலோச்சி வருகிறான். தந்தை இறந்தபோது, இளையவனான சுந்தர பாண்டியனுக்கு வயது ஐந்து. தனது தாய் திரைலோக்கிய முழுதுடையாளுடன் அவன் இந்தக் கொற்கைநகர் அரண்மனைக்கு வந்து ஆண்டுகள் பல கடந்து விட்டன. இப்போது கண்டோர் மயங்கும் வாலிபக் காளையாக வளர்ந்துவிட்ட இளவரசன் சுந்தர பாண்டியன்தான், பாண்டியப் பேரரசின் பெருவருவாயென விளங்கும் முத்துச்சலாபத்தையும், வலம்புரிச் சங்கு சேகரிப்பையும் கவனித்துக் கொள்கிறான். அவனது திறமை மிக்க நிர்வாகத்தாலும், பல புதிய முறைகளை அவன் புகுத்தியதாலும், எப்போதையும் விட இப்போது பாண்டியப் பொக்கிஷத்தில் முத்தும் சங்கும் பெருகிக் குவிந்திருக்கின்றன!

பௌத்த விகாரத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த 'சாதுர் மாசம்' முடிவடையும் நேரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. கீழ்த் திசை வானில் குவிந்திருந்த மழை மேகங்கள் திடீரெனக் நாலாபுறமும் யோடின. காற்று பலமாக வீசியது. புத்த விகாரின் இடக்கோடியில் செல்லும் பெருவழியொன்றின் ஓரமாக, வளமுடன் வளர்ந்து நின்ற ஒரு பெரிய புன்னை மரம், அந்தப் பேய்க் காற்றின் வேகத்தால் மளமளவென்ற பேரொலியுடன் முறிந்து கீழே சாய்ந்தது. அதே சமயம், அந்தச் சாலையின் மறுபுறமிருந்த ஒரு சுமைதாங்கிக் கல் தூணில் கட்டப்பட்டிருந்த குதிரையொன்று பெருத்த குரலெடுத்துக் கனைக்கும் சப்தம் நாலா திசைகளிலும் எதிரொலித்தது!

இவ்விரு ஒலிகளையும் கேட்டு, சற்று தூரத்தில் சிறிய செங்குத்தான பாறையின்மேல் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன் பரபரப்புடன் எழுந்து ஓடி வந்தான்.

* சிலப்பதிகாரம் — உரைபெறு கட்டுரை; ஷை —, நீர்ப் படைக் காதை 126—138.



அந்தக் குதிரை மீண்டும் கனைத்துத் தன் கமுகப் பூச் சரம் போன்ற வாலைச் சுழற்றி உதறியது.

அழகிய இளம் வாலிபனுயிருந்த அவன், குதிரையின் முதுகைத் தட்டித் தடவி விட்டுக்கொண்டே, சாலையின் குறுக்கே முறிந்து சாய்ந்து கிடந்த அந்தப் புன்னை மரத்தைப் பீதியுடன் பார்த்தான். ஏனென்றால், இன்று மாலை இருள்சூழும் நேரத்தில் இங்கு வந்த அவன், அந்தப் புன்னை மரத்தடியில்தான் உட்கார முதலில் நினைத்தான்; பிறகு வேறுவிதமாக எண்ணியவனுய், தன் குதிரையைச் சுமைதாங்கிக் கல் தூணில் கட்டிவிட்டு அப் பாறையின்மேல் ஏறி உட்கார்ந்தான். கொற்கையிலிருந்து துவங்கி, மதுரைக்குச் செல்லும் பெருவழியான அந்தச் சாலையில், யாரையோ சந்திக்க வந்த அவன், தான் எதிர்பார்க்கும் நபரின் வருகையை, இங்கிருந்தவாறே தொலை தூரத்திற்கப்பால் பார்வையைச் செலுத்திக் காண, உயரமான அந்தப் பாறையின்



மேல் போய் உட்கார்ந்தான். நல்ல வேலை, அவன் மட்டும் அங்கு செல்லாமல் இந்தப் புன்னை மரத்தடியில் உட்கார்ந்திருந்தால், இந்நேரம்?...

யார் அந்த வாலிபன்?

அவனது எளிய உடைகளையும், அமைதியான போக்கையும் பார்த்தால் அவன் ஒரு சாதாரணப் போர் வீரன் என்றே தோன்று[illegible]

ஆனால், அவனுடைய அந்தக் கம்பீரமான நடை, அலட்சியப் பார்வை, திண்மையான உடற்கட்டு — ஆகிய இவற்றையெல்லாம் கவனித்தால் அவன் ஓர் உயர்ந்த குடும்பத்து வாலிபன் போன்றல்லவா இருக்கிறான்!

ஓங்கிச் சுழன்றடித்த காற்றின் வேகம் தணிந்தது. சிதறிக் கிடந்த கருமுகில்கள் மீண்டும் திரண்டு வந்து கீழ்த் திசையில் குவிந்தன.

அவன் தன் குதிரையை அவிழ்த்துக் கொண்டு சாலைமேல் ஏறி நின்று சுற்று முற்றும் பார்த்தான்.



"ம்... இன்னும் அவன் வரக் காணோமே?" என்று தனக்குத் தானே மெல்ல முனகிக் கொண்ட அந்த வாலிபன், சற்று நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தான். பிறகு மெள்ளத் தலையசைத்து, "சரி; இனிமேலும் இங்கே இருந்து பயனில்லை. போகவேண்டியதுதான்!" என்று சொல்லிக் கொண்டே குதிரையின் கடிவாளத்தைப் பற்றி இழுத்தவாறு மெதுவாக நடந்தான்.

பயங்கர அசுரனொருவன் கையையும் காலையும் பரக்க விரித்துக் கொண்டு படுத்துக் கிடப்பதைப் போல அந்த மிகப் பெரிய புன்னை மரம் கப்பும் கிளையுமாகச் சாலையின் குறுக்கே சாய்ந்து விழுந்து கிடந்ததால், குதிரையுடன் வந்த வாலிபன் அதைக் கடந்து அப்பால் எப்படிச் செல்வது என்று ஒருகணம் திகைத்தான். துறைமுகத் திசை நோக்கி நேரே செல்லும் அச்சாலையின் வலது பக்கம் கடலும், இடது பக்கம் கள்ளி மரங்களும் களாச்செடிகளும் மண்டிச் செறிந்த காடும் இருந்தன. எனவே, குதிரையுடன் முட்புதர்கள் பக்கம் இறங்கிச் செல்வது கடினம்; வலது புறமுள்ள கடலுக்கும் சாலைக்கும் இடையே உள்ள வெண்மணற் பரப்பில் இறங்கிச் சுற்றிக்கொண்டு போய், மீண்டும் சாலைமேல் ஏறிக் கொள்வது ஓரளவு சுலபம். ஆனால், அந்த மணற்பரப்பில் ஆங்காங்கே உப்பளப் பாத்திகள் கட்டப்பட்டிருந்தன. சில இடங்களில் பனியுறை குன்றுகள்போல் உப்புச் செதில்கள் குவியல் குவியலாகக் குவித்து வைக்கப்பெற்றிருந்தன. மற்றும் சில இடங்களில் கடல் நீரைக் கொண்டு வந்து நிறைத்து வைக்கப் பெரிய பெரிய குழிகள் வெட்டப்பட்டிருந்தன. இப்படி யிருக்கும் அந்தப் பக்கம் இரவு நேரத்தில் குதிரையுடன் செல்வது கொஞ்சம் ஆபத்தானதே. ஆனால், அதைத் தவிர வேறு வழியில்லை.

மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு குதிரையுடன் வலப்புற மணற்பரப்பில் இறங்கினான் வாலிபன்.

அச்சமயம்—

உப்புக்கழிப் பக்கமிருந்து யாரோ ஒரு பெண், சாலையை நோக்கித் தலைவிரி கோலமாக ஓடி வருவது தெரிந்தது. சீறிப் பொங்கியெழும் கடலலைகளின் பேரொலிக்கும், சுற்றிச்சுழன்று வீசும் காற்றின் பேரோசைக்கும் இடையே, வெள்ளை வெளேரென விசாலித்துப் பரந்து கிடந்த மணல் வெளியில், தன்னந்தனியே நிலைகெட்டு ஓடி வந்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றான் வாலிபன். ஆனால், அவன் பின்னே வந்த குதிரை முன்னே சென்று அவனை இழுத்தது. கடிவாளத்தைப் பலமாகப் பற்றியிழுத்தபடிமேலேஎட்டிப் பார்த்தான். அதற்குள் அந்தப் பெண் மணல்வெளியைக் கடந்து சாலையை நெருங்கி விட்டாள்.

கண் மண் தெரியாமல் காற்று வேகமாக ஓடி வந்த அவள் தன் எதிரே சாலையோரம் யாரோ குதிரையுடன் நின்று தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் பெருத்த அளவில் திடுக்கிட்டுக் கிறீச்சிட்டு நின்று விட்டாள்.

இதைக் கண்ட வாலிபன் திகைப்பாலும் வியப்பாலும் ஓரடி பின் நகர்ந்து இருளை ஊடுருவி அவளை உற்றுப் பார்த்தான். அடுத்த கணம்,

அவள் அங்கிருந்து ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து சாலைமேல் ஏ கால் தெரியாமல் ஓட ஆரம்பித்தாள்.

• ஸ்தம்பித்து நின்ற வாலிபனுக்குத் தன்னை மீறிய ஒருவித பீதியும், அதனடியாகப் பிறந்த தவிர்க்க முடியாத ஒரு துணிவும் ஏற்பட்டன.

'அவள் யார்? இந்த இரவு நேரத்தில் எங்கே, ஏன் இப்படிப் பேயெனப் பாய்ந்து ஓடுகிறாள்?'—

ஓரே விநாடியில் எழுந்த இந்தச் சந்தேகம் அவனை உலுக்கி விட்டது. பற்றியிருந்த கடிவாளக் கயிற்றைக் குதிரையின் முதுகில் வீசியெறிந்து விட்டுச் சடாரெனச் சாலையில் ஏறி அந்தப் பெண்ணைப் பின் தொடர்ந்து ஓடினான் வாலிபன்.

புலியின் பாய்ச்சல் வேகத்தை மானின் ஓட்டம் மிஞ்சி விடுமா? அவன் அருகில் நெருங்கும் சமயம் அவள் சட்டென நின்றாள். ஆனால், அவனுக்காகத் தான் பயந்து நின்றவள்போல் காட்டிக் கொள்ளாமல் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள். பாதை தவறி வந்துவிட்டவள் போல் அங்குமிங்கும் பீதியுடன் நோக்கினாள்.



அவன் அவளெதிரில் போய் நின்று ஏதோ உரத்த குரலில் அதட்டிக் கேட்க வாய் திறந்தான். ஆனால், புயல் வேகத்தில் ஓடி வந்த அவனால் உடனே பேச முடியவில்லை. மேல் மூச்சுக் கீழ்மூச்சு வாங்கித் தொண்டையை அடைத்தது. அதற்குள் அந்தப் பெண்ணே முந்திக்கொண்டு, "ஐயா! இங்கே கடற்கரை ஓரமாக ஒரு புத்த விகாரம் இருக்கிறதாமே? அதற்குப் போகும் வழி எது?" என்று மிக மெல்லிய குரலில் கேட்டாள்.

இருளரக்கியின் சர்வாதிகார உச்சப் பிடியில் சிக்கித் திணறும் அந்த இரவு நேரத்தில், அவளுடைய முகத் தோற்றமோ அல்லது அவள் என்னென்ன ஆடையணி மணிகள் அணிந்திருக்கிறாள் என்பதோ தெரியவில்லை. ஆனால், அவள் பேசிய அந்தக் குரல்? அது என்ன, ஒரு பெண்ணின் குரலா?......இல்லை; கந்தர்வ யாழின் கானாம்ருத ஓசை!...இல்லை, இல்லை; மகரக் குழல் பிலிற்றிய மனானந்த இன்பநாதம்!......அதுவும் இல்லை; புள்ளிக்கோலம் புனைந்த மாங்குயிலின் சொர்க்க கீதம்!......

வ இல்லை; அது...அது...?

அவன் திணறினான். தன்னிரு செவிநிறையத் தண்தேன் குளம் வந்து பாய்ந்து அடைத்துக் கொண்டதுபோல் திணறித் திக்குமுக்காடினான். இதற்கு முன்னால் அவன் இம்மாதிரி குரலையே கேட்டு அறியாதவன்போல் உணர்வழிந்து நின்றான்.

"உங்களுக்குத் தெரியாது போல் இருக்கிறது. சரி; நானே தேடிப் போய்க் கொள்கிறேன்!" —

இரண்டாவது தடவையாக 'தேவகானம்' பொழிந்தது. அவள் நிஜமாகவே மானிடப் பெண்ணா? அல்லது பெண் வடிவம் எடுத்து வந்த மோகினிப் பிசாசா? இல்லையென்றால், இம்மாதிரி வீணாகானக் குரலை மிழற்ற அவளால் முடியுமா?...... பய உணர்ச்சியுடன் நடுங்கிப் பேசும் குரலொலியே இத்தனை பவித்திர நாதம்போல் இருக்கிறதென்றால், அவள் மகிழ்ந்து சிரித்துப் பேசும்போது அந்தப் பேச்சின் ஒலி எப்படி இருக்கும்?

அவள் அங்கிருந்து ஓடக் கால்களைப்பெயர்த்தாள். வாலிபன் விழிப்படைந்தான்.

"ம்...இம்?...பௌத்த விகாரம்தானே? அதோ, கூப்பிடு தொலைவில் தெரிகிறதே, அதுதான்!" என்று அவன் தட்டுத்தடுமாறிச் சொல்வதற்குள், அந்தப் பதிலைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே அவள் பஞ்செனப் பறந்து ஓடிவிட்டாள்.

பரபரப்புடன் திரும்பிப் பார்த்தான் வாலிபன். அதற்குள் அந்த இன்சுவைக் குரலுக்குரியவளை இருள் தேவி அவசரமாக மூடி மறைத்து விட்டாள்!

அடாடா, அவன் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டான்! அவளைப் பற்றிய ஒரு விவரமும் கேட்க மறந்து விட்டானே!

'அவள் யார்? எங்கிருந்து வருகிறாள்? ஏன் இந்த நேரத்தில் புத்த விகாரத்தைத் தேடி ஓடுகிறாள்? அங்கே யாரைப் பார்க்கப் போகிறாள்? உலக பந்தங்களை உதறியெறிந்த புத்தத் துறவிகள் வாழும் அந்தப் புத்த மடாலயத்தில், இளங்குருத்துப்பெண்



ணான அவளுக்கு என்ன வேலை? அதுவும் இந்த இரவு நேரத்தில்?'—

வாலிபனின் உள்ளத்தில் இவை போன்ற இன்னும் பல கேள்விகள் எழுந்து குடைந்தன. உடனே அந்தப் புத்த விகாரத்துக்குப் போய் அவளைப் பற்றிய விவரங்களை அறிய வேண்டுமென்று அவன் மனம் துடித்தது. ஆனால், அடுத்த கணமே ஒரு பெருந் தயக்கம்:

இந்த நேரத்தில் அவன் ஒரு பெண்ணைப் பின்தொடர்ந்து புத்த மடாலயத்திற்குப் போக முடியுமா? அப்படிப் போனால், அதனால் நேரும் வீணான விளைவுகளைச் சமாளிக்க வேண்டுமே! ஏன் இந்த வீண் முயற்சி? அவள் யாராய் இருந்தால் என்ன? எதற்கோ பயந்து, யாரிடமிருந்தோ தப்பி ஓடுகிறாள். அல்லது எதற்கேனும் யாரையாவது அவசரமாகப் பார்க்க அங்கு அவள் போகலாம். அதற்குக் கூடவா இந்தத் தென் பாண்டி நாட்டில் சுதந்தரம் இல்லை? உப்பரிகையில் வாழும் பெண்கள் தான் உலகம் இருண்டதும் வெளியே வரப் பயப்படுவார்கள்; ஏழைப் பெண்களுக்கு இரவும் பகலும் ஒன்றுதானே ...? அப்படியானால் அவள் ஏழைக் குடியில் பிறந்த பெண்ணா? அவளுடைய அந்தக் குரல்—இசை மணம் கமழும் அந்த இன்னமுதக் குரல்—அது ஓர் ஏழைப் பெண்ணின் கண்டத்தில் குடியேறும் குரலா?...

தொலைதூரத்தில், மணற் பரப்பின் இறக்கத்தில், நின்று கொண்டிருந்த குதிரை கனைக்கும் சப்தம் கேட்டது. அவன் தன் உடம்பை ஓர் உலுக்கு உலுக்கிக் கொண்டு திரும்பி நடந்தான்.

சாய்ந்து கிடந்த புன்னை மரத்தருகில் சென்றதும் அவன் சற்றே தயங்கி நின்று திரும்பி, அந்த நீண்ட நெடுஞ் சாலையை நிமிர்ந்து பார்த்தான். மின்மினிப் பூச்சிகளின் ஒளிக் கோலங்களைத் தவிர வேறு ஒன்றுமே தெரியவில்லை. கட்புலனை மூடிச் செவிப் புலனைக் கூர்மையாக்கினான். அவன் எதிர்பார்த்த ஒலியின் இழைகூடக் கேட்கவில்லை.

"இன்னும் ஏன் அவன் வரக் காணோம்?" என்று சற்று முன் கேட்ட அதே கேள்வியைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டு சாலையை விட்டுக் கீழே இறங்கினான்.

இந்தச் சமயத்தில் —



அந்தப் பெண் ஓடி வந்த அதே திசைப் பக்கமிருந்து யாரோ ஓர் ஆள் தலைதெறிக்க ஓடி வருவது தெரிந்தது. இதைக் கண்ட வாலிபனுக்கு ஒரே குழப்பமாகி விட்டது. உள்ளூற ஒருவித பயமும் முளைகட்டி நிமிர்ந்தது. இடையில் தொங்கிய வாளை இறுகப் பற்றிக்கொண்டு, குதிரையின் விலாப் பக்கம் வந்து சாய்ந்து நின்ற வண்ணம், ஓடி வரும் அந்த ஆளையே உற்றுப் பார்த்தான்.

குதிகாலில் பறிந்த மணல் உச்சந் தலையில் இறைந்து நிறைய ஓடி வந்த அந்த ஆள், சாலைச் சரிவில் தபதப வென ஏறினான். குதிரையருகில் நின்றிருந்த வாலிபன் உரத்த குரலில் "யார் அங்கே?" என்று அதட்டிக் கேட்டபடி விரைந்து ஓடி அவன் எதிரில் நின்றான். சற்றும் எதிர்பாராமல் தன் எதிரே வந்து நின்ற வாலிபனைக் கண்டதும், அந்த ஆளின் உடல் நடுங்கியது. குறுக்கிலும் நெடுக்கிலும் குறையற வளர்ந்திருந்த அவன் நடுத்தர வயதினனாய் இருக்க வேண்டும். ஆனால், அதை நிச்சயப் படுத்திக்கொள்ள முடியவில்லை. இருளின் வலிமை அவ்விருவரின் முகத் தோற்றத்தையும் மறைத்துச் சிரித்தது.

நெஞ்சு விரிய மூச்சு விட்டுக் கொண்டு நின்ற அந்த ஆள் பரபரப்பான குரலில், "ஐயா, இந்தப் பக்கம் ஒரு பெண் ஓடி வந்தாளே, நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டான்.

வாலிபன் உஷாரானான். "பெண்ணா? நான் பார்க்கவில்லையே!"

இதைக் கேட்ட அந்த ஆள் திகிலடைந்தவனாய், "நீங்கள் பார்க்கவில்லையா? சற்று முன் இந்தப் பக்கம் தான் அவள் ஓடி வந்தாள்!...... வேளை நீங்கள் இங்கே வருமுன் யில் ஏறிப் போய்விட்டிருப்பாளே என்று இழுத்தான்.

'உண்மையை இவனிட லாமா வேண்டாமா' கணம் சிந்தித்தான் உடனே அவன் "அ யார்? எங்கிருந்து என்று சற்றே கடின கேட்டான்.

அந்த ஆள் ஓ நகர்ந்து வாலிபனி ருவிப் பார்க்க முய அறிந்த வாலிபனும் பின்னால் நகர்ந்து நி டான்.

“நான் ஒரு வியாபாரி. சோனக* நாட்டைச் சேர்ந்தவன். முத்துக் கொள்முதல் செய்து போகக் கடந்த வாரம் கொற்கைக்கு வந்தேன். அதோ தெரியும் கூடாரங்களில் ஒன்றில் தங்கி யிருக்கிறேன்.”

இதைக் கேட்ட வாலிபன் வியப்பும் திகைப்பும் அடைந்தான். ஏனென்றால், சற்று முன் பார்த்த அந்தப் பெண் அவனிடம் அழகாகத் தமிழில் பேசினளே! தன் வியப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டு, “அந்தப் பெண் உங்களுக்கு என்ன உறவு?” என்று கேட்டான்.

ஒரு கணம் தயங்கி விட்டுப் பிறகு தணிந்த குரலில் “அவள் என் தங்கை. வளம் மலிந்த இந்தத் தென்பாண்டித் தமிழ் நாட்டைக் காணவேண்டுமென்று விரும்பி நீண்ட நாட்களாக என்னை வற்புறுத்தி வந்தாள். ஆண்டுக்கு இருமுறை நான் கொற்கைக்கும் தொண்டிக்கும் வருவது வழக்கம். இம்முறை புறப்படும்போது அவள் ஓரே பிடிவாதமாக என்னுடன் கிளம்பி வந்து விட்டாள்; என்ன துரதிர்ஷ்டம் பாருங்கள், ஐயா! நாங்கள் வந்த நாவாய், ஈழநாட்டின் துறைமுகத்தை அடைந்ததும், என் தங்கை திடீரெனச் சித்த சுவாதீனமிழந்தவள் போல் பிதற்ற ஆரம்பித்தாள் கப்பலில் இருந்தவர்களெல்லாம் அவளை அங்கேயே இறக்கி விட்டு விட
"ாசனை கூறினார்கள். நான் தயங்
கிணான். ஏனென்றால், அவளோ
லயத்மறியாத இளம் பெண். நாடு
அப்பட வந்திருப்பவள். அவளைத்
தினை ிட்டுவிட்டு நான் இங்கே
வேண்டுமோ? நானும் அவளுடன்
அவள் யார்ர வேண்டும். அப்படி
எதற்கோ பயடால் இந்த அரை
தப்பி ஓடுகிறுமுத்துக் கொள்முதல்
னும் யாரையடப்பட்டுப் போகும்.
பார்க்க அங்கு பெரிய நஷ்டமாக
அதற்குக் கூட ஆனல், கப்பல் மீகா
பாண்டி நாட்டிஅவளை இனிக் கப்ப
உப்பரிகையில் ங் கூடாது என்று
தர்ன் உலகம் இருன்-அவனிடம் கெஞ்
வரப் பயப்ட
பெண்களுக்கு ட
தானே...? அ



சிக் கூத்தாடி அவளைக் கொற்கைவரை கொண்டுவர அனுமதி பெற்றேன். கப்பல் புறப்பட்டு கோடிக்கரை அருகில் நெருங்கியபோது அவள் திடீரென ‘புத்தம் சரணம் கச்சாமி...’ என்று பாட ஆரம்பித்தாள். எனக்கு ஓரே வியப்பாகி விட்டது. ஏனென்றல், நாங்கள் ஜாரதுஷ்டிர மதத்தைச் சார்ந்தவர்கள். என் தங்கைக்கு எப்படி இந்த பௌத்தத் திருமந்திரம் தெரிந்தது......? குழப்பத்துடன் கொற்கையை அடைந்தேன். ஒரு கூடாரம் அமைத்துக் கொண்டு என் தங்கையுடன் தங்கினேன். இந்நகரில் எனக்குத் தெரிந்த ஒரு வைத்தியரை அழைத்து வந்து அவளைக் காட்டினேன். அவர் ஏதேதோ சிகிச்சைகள் செய்தார். ஐந்தாம் நாள் அவளுக்கு ஓரளவு குணம் கண்டது. நான் மகிழ்ச்சியுடன் என் வியாபார வேலைகளைக் கவனித்தேன். அவளும் கடந்த இரண்டு நாட்களாகச் சுயத் தெளிவுடன் இந்த அழகிய நகரை நன்கு சுற்றிப் பார்த்தாள். இன்றிரவு நானும் அவளும் சாப்பிட்டானதும் கூடாரத்துக்கு வெளியே மணலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். திடீரென அவளுக்கு என்ன ஏற்பட்டதோ தெரியவில்லை; சடாரென எழுந்து கடற்கரையோரம் ஓட ஆரம்பித்தாள். திகைத்துத் தடுமாறிய நான் எழுந்து அவளைப் பின் தொடர்ந்து ஓடினேன். எப்போதுமே ஓடிப் பழக்கமில்லாத அவளால் அத்தனை வேகமாக ஓட எப்படி முடிந்ததோ! நானே அவள் ஓட்டத்திற்கு ஈடாக ஓட முடியாமல் சில இடங்களில் மணலில் கால்கள் சிக்கிக் கீழே விழுந்து விட்டேன். ஆனல், அவளோ காற்றெனக் கடுகி இந்தப் பக்கம் ஓடி வந்தாள். நானும் அவளைப் பின் தொடர்ந்து இதோ ஓடி வருகிறேன்!” என்று சொல்லி நிறுத்தினன் சோனக வணிகன்.

தான் கேட்டதற்கு அந்த ஆள் இத்தனை விரிவாகப் பதில் சொல்வான் என்று வாலிபன் எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு ஆச்சரியமும் அனுதாபமும் மிகைத்தன. ‘அவள் பேசியதைப் பார்த்தபோது சித்த சுவாதீனமிழந்தவள்போல் தோன்ற

வில்லையே?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட அவனுக்குச் சட்டெனெ ஒரு சந்தேகம் பிறந்தது. "ஆமாம்; அந்தப் பெண்ணுக்குத் தமிழ் பேசத் தெரியுமா?" என்று அடித்தொண்டையில் கேட்டான்.

"நன்றாகப் பேச வரும், ஐயா! நான் இங்கு கற்றுக் கொண்ட தமிழை எங்கள் ஊருக்குப் போனதும் ஓய்வு கிடைத்த போதெல்லாம் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தேன். மிக விரைவில் அவள் இந்த மொழியைக் கற்றுக் கொண்டு, என்னைவிட நன்றாகப் பேசினாள். அந்தத் தைரியத்தில்தான் அவளை இங்கே அழைத்து வந்தேன். வந்த இடத்தில் இப்படி மோசம் செய்து விட்டாளே!...ஐயோ, நான் என்ன செய்வேன்?...ஊருக்குப் போய் என் பெற்றோர்க்கு என்ன பதில் சொல்வேன்?" என்று அந்த ஆள் பிரலாபிக்க ஆரம்பித்தான்.

**வா**லிபன் )தைக் கேட்டுப் பலத்த யோசனையில் ஆழ்ந்தான். அந்தப் பெண் போன இடத்தை அவனிடம் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் சிந்தித்தான். மறு கணமே அவன் உள் மனம் அதை மறுத்தது. அவனைப் பற்றி ஏதோ ஒரு சந்தேகம் முளை கட்டியது. "நான் இந்தச் சாலை வழியேதான் வந்தேன். என் கண்ணில்



எந்தப் பெண்ணும் தென்படவில்லை. தொலைதூரத்தில் வரும்போது ஏதோ ஒரு கரிய உருவம் இப்படிக் குறுக்கே ஓடியது தெரிந்தது. ஒருவேளை அது அந்தப் பெண்ணாக் இருக்கலாம். எதற்கும் இந்த கள்ளிக் காட்டில் நுழைந்து தேடிப் பாருங்கள்!" என்றான் நிதானமாக. பிறகு ஏன் இப்படி ஒரு பொய் சொன்னோம் என்று அவனுக்கே வியப்பாக இருந்தது. மனிதனின் உள் மனம் இப்படித்தான் சில சமயம் காரண காரியமின்றியே புற மனத்தின் முடிவை மாற்ற முற்படுகிறது. 'ஏன் இப்படி?' என்ற கேள்விக்கு நாள் பட்டுப் பதில் கிடைக்கும்; அல்லது பதிலே கிடைக்காமல் போய் விடுவதும் உண்டு.

அந்த ஆள் அவசர அவசரமாக "நன்றி ஐயா! நான் வருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே, சாலையின் இடது புறமிருந்த கள்ளிக் காட்டை நோக்கி விரைந்தான்.

இந்த இருட்டு நேரத்தில் அந்தக் காட்டில் நுழைய அவனுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்? நிஜமாகவே அவன் ஒரு சோனக தேசத்து முத்து வியாபாரிதானா?

வியப்புடன் அவனையே பார்த்துக் கொண்டு நின்றான் வாலிபன். இமை தட்டும் சில பொழுதில் அந்த ஆள் எங்கோ சென்று மறைந்து விட்டான்.

வாலிபன் சடக்கெனத் தன் கை விரல்களைச் சொடுக்கி, "ஆகா, இதைக் கேட்க மறந்து விட்டேனே! அவன் பெயரையோ அந்தப் பெண்ணின் பெயரையோ கேட்காமல் விட்டு விட்டேனே! இன்று ஏனோ என் புத்தி சரியாகவே வேலை செய்யவில்லை!" என்று தன்னைத்தானே கடிந்து கொண்டான்.

அவன் புத்தி ஏன் இன்று சரியாக வேலை செய்யவில்லை?... அந்த மர்மப் பெண்ணின் கன்னல் குரலைக் கேட்டதாலா?

**வா**லிபன் வேகமாகப் போய் தன் குதிரையை இழுத்துக்கொண்டு உப்புப் பாத்திகளை மிதித்துத் துவைத்தபடி நடந்தான். ஓரிடத்தில், வலப்புறம் உப்புக் குவியலும், இடப்புறம் ஒரு பெரிய பள்ளமும் இருந்தன. அவற்றைச் சுற்றித் திட்டுத் ...டாகத் தண்ணீர் தேங்கி நின்ற... உப்புக் குவியலுக்கும் பள்ளத்தி... இடையே உள்ள குறுகலான ...டட்டும் காய்ந்திருந்தது. குதிரையை நடத்திக்கொ... வழியே சென்றான்.

ஒரு சில அடிகள் ... அச்சமயம், சாலையி... தொலைதூரத்தில் ... வரும் குளம்பொலி... ...து. வாலிப... ஒலிவரும் தி... அவன் முகம் ம...



"சந்தேகமில்லை... வருகிறான்!" என்று... வாய் விட்டுச் சொ...



"ஏய்! உன் கையிலே இந்தப் பர்ஸ் எப்படி வந்தது?..."

"சத்தியமாத் தெரியாதுங்க! ஒருக் கால் இதுவும் மந்திரவாதி வேலையா யிருக்கலாமுங்க!..."



லயத்ம,
அப்பட்
விஞன பிட்ப
வேண்டுமோ?
அவள் யார
எதற்கோ பய
தப்பி ஓடுகிற
னும் யாரைய
பார்க்க அங்கு பெ
அதற்குக் கூட ஆனல்
பாண்டி நாட்டிஅவளை யக உடம்பு எப்
உப்பரிகையில் ஸ்
தர்ன் உலகம் இன்
வரப் பயப் ரியல்லே, என் மனே
பெண்களுக்கு ால்றேன்!
தானே ...? அ

குதிரையின் கடிவாளத்தை வேகமாக இழுத்து அதைத் திருப்பினான்.

அடுத்த கணம் —

அந்தப் பெரும் பள்ளத்தின் ஓர மிருந்த மணல் சரிந்து குதிரையின் பின்னங்கால்கள் உள்ளுக்கு நழுவின. அதைத் தொடர்ந்து குதிரை தடா லெனப் பள்ளத்தில் வீழ்ந்தது! அதைப் பற்றிக் கொண்டிருந்த வாலி பனும், எதிர்பாராமல் ஏற்பட்ட அதிர்ச்சியால் நிலைதடுமாறிக் குழி யில் குப்புற விழுந்து விட்டான்!

அதிர்ஷ்டவசமாக அவனும் குதிரை யும் ஆபத்து ஒன்றுமின்றித் தட்டுத் தடுமாறி எழுந்து நின்றனர். ஆனால், பள்ளத்திலிருந்து வெளியேற முடிய வில்லை. கைப் பிடிமானத்திற்குத் தோதாக ஒன்றுமே கிடைக்கவில்லை. எங்கே கை வைத்தாலும் மணல் 'பொலபொல'வென உள்ளுக்குச் சரிந்தது. உடலெல்லாம் மணலும் உப்பு நீருமாகச் செரும, திகைத்து நின்று விட்டான்.

சாலையில் ஓடி வந்து கொண்டி ருந்த குதிரை, சாய்ந்து கிடந்த அந்தப் புன்னை மரத்தருகில் நெருங்கியது. அதைச் செலுத்தி வந்தவன் அங் குள்ள நிலைமையை அறிந்து, குதி ரையை இடது பக்கம் திருப்பினான். கள்ளிக் காட்டின் ஓரமாக மெள்ள நடந்து மறுபக்கச் சாலையில் ஏறிக் கொள்ளலாம் என்பது அவன் திட் டமா யிருக்கலாம்.

இங்கே பள்ளத்தில் விழுந்து நின்று கொண்டிருந்த வாலிபன், 'அவன் தன் குதிரையுடன் வலது பக்கம் இறங்கி வருவான்; அவனுடைய துணையுடன் தானும் தன் குதிரையும் மேலே ஏறிக் கொள்ளலாம்' என்று எதிர்பார்த்தான்.

ஆனால், சற்று நேரத்திற்கெல்லாம் புன்னை மரத்தைக் கடந்து சாலையில் ஏறிய அந்தக் குதிரை, பெருத்த குளம்பொலியுடன் வேகமாகக் கிளம்பி ஓடும் சப்தம் கேட்டது!

பள்ளத்தில் நின்ற வாலிபன் இதை யறிந்து பீதியடைந்து விட்டான். உரத்த குரலெடுத்து "காங்கேயா!... ஏ, காங்கேயா!" என்று கத்தினான்.

காங்கேயன் காதில் இந்தக் குரல் விழுமா? அவன் காத தூரத்திற்கும் அப்பால் போய் மறைந்தே விட்டான்!

(தொடரும்)


ஆலவாய் அழகன்
ஜெகசிற்பியன்

படைகள் சூழப் பிரமாத ஆர்ப்பாட்டங்களுடன் போர்க்களம் புகுந்தவுடன், எதிரியின் முதல் தாக்குதலையே சமாளிக்க முடியாமல் புறமுதுகிட்டு நாலாபுறமும் சிதறி ஓடுவதைப்போல, இடியும் மின்னலும் காற்றும் மேகமுமாய் ஆர்ப்பரித்து வந்த மழை, இரண்டொரு தூற்றல்களுடன் பிசுபிசுத்து விட்டு மறைந்தது. ஆனால், அதன் தோல்விப் பெருமூச்சு சில்லென்ற காற்றாக உருவெடுத்து உப்புப் பனி நீரைச் சுமந்து வீசியது.

இந்த நடுக்கும் குளிரில் நின்று நின்று கால் ஓய்ந்தான் அந்த வாலிபன். இரண்டு ஆள் ஆழமிருந்த அப்பள்ளத்தில், முழங்கால் அளவுக்குக் கடல்நீர் சுரந்து விட்டது. விடிவதற்குள் அது இடுப்பளவோ மார்பளவோ ஏறி விடலாம். பிறகு தலைக்குமேல் நிறைந்து எழும்பி, அங்குள்ள அவ்விரு ஜீவன்களையும் பறித்துத் தன்னுள் கரைத்து ஐக்கியமாக்கிக் கொள்ளலாம்!......

அவ்வப்போது அவன் மேலேற முயன்றதின் பலனைத் தலையிலிருந்து உடலெல்லாம் ஈர மண்ணும் உப்புக் குழம்பும் அப்பிக் கரிக்க ஆரம்பித்தது. தலைக்கு மேலே பனிக்காற்றின் அழுத்தம்; கீழே பனிக்கட்டி போன்ற சில்லென்ற உவர்ப்பு நீர். இவற்றிற்கிடையே தத்தளித்துக்கொண்டு நின்றிருந்த அவனும் அவனது குதிரையும் விறைத்துச் சிலையாகும் நிலைக்கு வந்து விட்டார்கள். விடிவதற்குள் அவனும் அந்தக் குதிரையும் இந்தப் பெரும் பள்ளத்திற்குப் பலியாகி விடுவார்களா?

பழம் பெருமை வாய்ந்த பாண்டிய நாடு இன்றுள்ள நிலைமையில், இந்த வாலிபன் இங்கே இறக்க நேர்ந்தால்?......ஐயோ!......அதைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாது!

தான் இறந்து போவதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. ஆனால், விடிவதற்குள் தன்னைத் தேடிவரும் பலநூறு வீரர்கள் தனது உயிரற்ற உடலை இந்த உப்புநீர்ப் பள்ளத்திலிருந்து கண்டெடுத்தால் — அது எவ்வளவு பெரிய கேவலம்!......நூற்றுக் கணக்கான யானைகள் பிளிற, ஆயிரக் கணக்கான குதிரைகள் கனைக்க, இலட்சக் கணக்கான போர்வீரர்கள் வேலோடும் வாளோடும் பாய்ந்து வர — இவற்றின் மத்தியிலே, இவற்றையெல்லாம் தருகண் ஆண்மையுடன் எதிர்த்தபடி, தன் வைரம் பாய்ந்த நெஞ்சில் வாளோ வேலோ ஏந்தி வீரசொர்க்கம் புகவேண்டிய அவனு இந்த உபயோகமற்ற பள்ளத்தில் விழுந்து இறப்பது?... இதுகூட அவனுக்கு அத்தனை கவலை அளிக்கவில்லை. ஆனால், அவன் யாரைச் சந்திக்க ஆவலுடன் இங்கு வந்து காத்திருந்தானோ அந்தக் காங்கேயன் அவனைப் பார்க்காமலே போய் விட்டானே! அவன் என்ன அவசரச் செய்தியைக் கொண்டு போகிறானோ? அச் செய்தியினால் எதிர்காலம் என்னென்ன சித்திரங்களைத் தீட்டிக் காட்டப் போகிறதோ? அதையெல்லாம் காண இந்த வாலிபன் கொடுத்து வைக்கவில்லையே?... அடாடா! அந்தத் தேனொடைக் குரல் படைத்த பேதைப்பெண்ணின் கதி இந்நேரம் என்ன ஆகியிருக்கும்? அவள் புத்தமடாலயத்தை அடைந்து விட்டிருப்பாளா? அல்லது அவளுடைய சகோதரன் என்று சொல்லிக்கொண்டு அவளைத் தேடி ஓடிய சோனக வணிகனின் கையில் சிக்கிக் கொண்டிருப்பாளா? தன் கண்ணெதிரே நிகழ்ந்த ஒரு மர்ம நாடகத்தின் மூலக் கருவை உடைத்துப் பார்க்க முடியாமல் விதி சதி செய்து விட்டதே!...

இடுப்பளவுக்குத் தண்ணீர் சுரந்து ஏறி விட்டது. உயிர்ப் பயம் அவன் உள்ளத்தைப் பிடித்துக் குலுக்கியது. தன்னுடன் நடுங்கிக்கொண்டு நின்ற குதிரையைப் பார்த்தான். அந்தக் கவனமற்ற குதிரையால்தானே அவனுக்கு இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டு விட்டது? வெறுப்பும் கோபமும் மிகுந்தவனாய் அக் குதிரையின் பிடரியில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அடிபட்ட குதிரை கனைக்கவில்லை; தான் செய்த பெருந்தவற்றால் தன் எஜமானனுக்கு இம்மாதிரி இன்னல் நேர்ந்து விட்டதே என்பதை முழுதும் உணர்ந்த மாதிரி, அவன் முகத்தை மிகப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தது. நீர் நிறைந்து பளிச்சிடும் அதன் கண்களைக் கண்டதும் வாலிபனின் கோப உணர்ச்சியெல்லாம் மறைந்து உள்ளம் உருகிக் கரைந்து விட்டது. தன் அருமைக் குதிரையின் கழுத்தைக் கட்டி அதன் முகத்தோடு முகம் வைத்து உரசினான். அவ்விருவரின் உள்ளமும் அன்பு உணர்ச்சியால் அழுதது!

“இளவரசே!”

வாலிபன் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தான். புலர்ந்தும் புலராக் கன்னிக் காலை நேரத்தின் மிகச் சன்னமான ஒளிநிரவலில், அந்தப் பள்ளத்தின் மேல் விளிம்பில், ஒரு நெடிய உருவம் நின்று கொண்டிருந்தது. வியப்பும் துடிப்பும் மிகுந்தவனாய், தன் கண்ணிமைகளில் செருமிக் கொண்டிருந்த பொடி மணலைத் துடைத்து விட்டுக்கொண்டு, பரக்கப் பரக்க மீண்டும் அண்ணாந்து பார்த்தான். மெலிந்துயர்ந்த அந்த உருவம் சற்றே குனிந்து மறுபடியும் தணிந்த குரலில், “இளவரசே! இதோ, இதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வாருங்கள்!” என்று கூறியபடி, தான் போர்த்திக் கொண்டிருந்த நீண்ட சால்வையொன்றை எடுத்துக் கயிறு போல் முறுக்கிப் பள்ளத்தில் விட்டது.

தன் உயிரின் மீது திடீரென ஏற்பட்ட ஆசையால், மேலே நின்றிருக்கும் அந்த நபர் யார் என்பதை அறிவதில்கூட கவனம் செலுத்தாமல், எப்படியும் இந்தப் பள்ளத்திலிருந்து தப்பிப் பிழைத்தால் போதும் என்ற ஒரே நோக்கில், தன் தலைக்கு நேரே தொங்கிய சால்வையின் முனையைத் தாவிப் பற்ற முயன்றான் வாலிபன். ஆனால், என்ன துரதிர்ஷ்டம்! தொங்கும் சால்வையின் நுனிக்கும், உயர்த்திய அவன் கைக்கும் இடையே, மூன்று ‘குடிதாங்கிக் கோல்’ தூரம் இருந்தது. மேலே நின்ற உருவமும், பள்ளத்தில் நின்ற வாலிபனும் என்ன முயன்றும் அந்தச் சால்வையால் தொடர்பு கொள்ள முடியவில்லை. எனினும் இருவரும் விடாமல் முயன்று கொண்டே இருந்தனர்.

மேலே இருந்த உருவம தரையோடு தரையாகப் படுத்து இடக் கையை ஊன்றிக்கொண்டு வலக்கையை நீட்டிப் பள்ளத்தில் சால்வையைத் தொங்க விட்டது. அதை எப்படியும் பிடித்துவிட வாலிபன் நெம்பித் திமிறி எகிறிக் குதித்தான். ஒவ்வொரு தாவலுக்கும் அவன் பல முறை தட்டுத் தடுமாறித் தண்ணீரில் விழுந்தான். நீண்ட நேரமாகியும் அவனால் அந்தச் சால்வையை எட்டிப் பிடிக்கவே முடியவில்லை.

இதை யெல்லாம் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்த குதிரை திடீரென ஒரு துள்ளுத் துள்ளியது. மறு கணம் அது தன் கழுத்தை வளைத்து அந்த வாலிபனின் இரு கால்களுக்கும் இடையே விட்டு மெல்ல நிமிர்ந்தது! இவ்வளவு நேரம் தனக்கு உதிக்காத இந்த யோசனை அந்த வாயற்ற ஜீவனுக்கு எப்படி உதித்தது என்று வியந்து கொண்டே அவன், அக் குதிரையின் முதுகில் ஏறி நின்று, மேலே தொங்கிய சால்வையைப் பற்றி ஏற ஆரம்பித்தான்.

அவன் மேலே ஏறயேற சால்வை கொஞ்சங் கொஞ்சமாகக் கீழே தளர்ந்து வந்தது! ஏனென்றால், தரையில் படுத்துக் குழியில் சால்வையைத் தொங்க விட்டுப் பிடித்துக் கொண்டிருந்த உருவம், வாலிபனின் கனத்தை இழுத்துப் பிடிக்க மாட்டாமல், திக்கித் திணறிச் சிறுகச் சிறுகப் பள்ளத்தில் சரிந்து கொண்டேயிருந்தது! எந்த விநாடியும் அவ்விருவரும் தொபீரெனப் பள்ளத்தில் விழலாம்!

இப்படி இருவரும் ஜீவ மரணப் போராட்ட மிட்டுக் கொண்டிருக்கும்போது, எங்கிருந்தோ வெகு வேகமாக ஓடிவந்த ஓர் ஆள், அந்தப் பள்ளத்தருகில் நெருங்கி, சால்வையோடு குப்புற விழவிருந்த ஆளின் காலை இறுகப் பற்றித் தன் பலங் கொண்ட மட்டும் தரையோடு தரதர வென இழுத்தான். இதனால் சற்றைக் கெல்லாம் பள்ளத்தினுள்ளிருந்த வாலிபன் வெளியே தாவி மூச்சுப்பேச் சற்று விழுந்தான்! அவனுடன் அந்த நெடிய உருவமும் சற்றுத் தொலைவில் போய் சுருண்டடித்து விழுந்தது!...

உஷைக் கன்னி துயிலினின்றும் எழுந்து ஒளிநீரால் முகம் கழுவிப் புன்னகைத்தாள். அந்தத் தண்சிரிப்பைத் தாளமாட்டாமல் தாவித் தாவி ஓடினாள் இருளரக்கி. எங்கெங்கும் ஒருவிதப் புகைசூழ்ந்த மெல்லொளி பரந்து பரவியது.

வாலிபன் மெல்லக் கண் திறந்து எழுந்து உட்கார்ந்தான். அவன் எதிரே அந்த மூன்றாம் ஆள் மிக்கப் பணிவுடனும், மிகுந்த கவலையுடனும் மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான்.

யார் அந்த வாலிபன்? — சந்தேக மில்லை; பாண்டியப் பேரரசின் மகாமன்னனாயிருந்து காலஞ்சென்ற மாற **வர்மன் விக்கிரம பாண்டியனின் இளைய**

குமாரனும் _ _ பாண்டி நாட்டைக் கோலாச்சி வரும் முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் தம்பியும், எதிர்காலப் பாண்டிய மணிக்கிரீடத்தை ஏற்கப் போகிறவனுமான இளவரசன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்தான் அங்கே களைத்துச் சோர்ந்து எழுந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறுன்!

தக்க தருணத்தில் ஓடி வந்து இரண்டு பேர் உயிரைக் காப்பாற்றிய மூன்றும் ஆளான அந்த வீரன் யார்? —அவன்தான் சுந்தர பாண்டியனின் உயிர்த் தோழனும், தென்பாண்டி நாட்டின் முனையெதிர் மோகர்ப் படைத் தலைவனுமான காங்கேயன்!..

அதோ, மெள்ள எழுந்து உட்கார்ந்திருக்கும் அந்த நெடிதுயர்ந்த மெலிந்த உருவம் யார்? பழுத்த மாவிலையின் நிற மேனி, பக்தியால் ஒடுங்கி உலர்ந்த உடல், ஞானத்தால் நீண்டுயர்ந்த நாசி, அறுசுவை நீக்கத்தால் வெளுத்த அதரங்கள், மோனத்தால் ஒளிரும் கண்கள், மோக உணர்ச்சியை முற்றுந் துறந்த விசால நெற்றி, சீலத்தால் முதிர்ந்து மழுங்கிய தலை, ஞாலத்தை அறிவால் அளந்து அன்பால் வெல்லும் அருள் வடிவம் —ஆம்; அவர் பெயர் அன்பானந்த கௌஸாம்பி. அவர் ஒரு பௌத்தத் துறவி. அதோ தெரியும் புத்த மடாலயத்தின் தலைவர் அவர்!......

இளவரசன் சுந்தர பாண்டியன் எழுந்து போய் கௌஸாம்பியின் அருகில் அமர்ந்து, "அடிகளே! தாங்கள் செய்த இந்தப் பேருதவியை நான் என்றென்றும் மறக்க மாட்டேன்!" என்றுன் நன்றி துளும்பும் குரலில்.

பக்கு விருந்தே கௌஸாம்பியை நன்கு தெரியும். அவரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவன். அன்பானந்தர் அடிக்கடி அரண்மனைக்கு வருவார். அரசி திரைலோக்கியமுழுதுடையாளிடமும், இளவரசன் சுந்தரனிடமும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார். மானிட வாழ்க்கையின் உயர் நோக்கங்களைச் சுவைபட எடுத்து ஓதுவார். அரசியல் பிரச்னைகளில் மனம் உளைந்து கிடக்கும் அவர்களுக்கு அவரது பேச்சு அருமருந்தாய் அமையும். புத்த மடாலயத்தில் ஒரு பெரிய நூல்நிலையம் உண்டு. ஓய்விருக்கும் போதெல்லாம் அந்நிலயத்துக்கு இளவரசன் போவது வழக்கம். அன்பானந்தர் இளவரசனை அன்புடன் வரவேற்று உபசரிப்பார்; அமுத மொழிகள் பல புகல்வார். அந்த அன்பானந்த கௌஸாம்பி இந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக இங்கே வந்து தன்னைக் காப்பாற்ற



முயன்றது அவனுக்குப் பேராச்சரிய மாக இருந்தது.

"இளவரசர் எனக்கு நன்றி கூறு முன், நம் இருவரையும் காப்பாற்றிய உங்கள் நண்பன் காங்கேயனுக்கு முதல் நன்றி கூறுவது நல்லது!" என்றார் கௌஸாம்பி" புன்னகையு டன். அவரது பொன்னொளிர் மேனி யெங்கும் ஈரக் கடல் மணல் அப்பி யிருந்தது. தரையில் குப்புறப் படுத்து இழுபறிபட்டதால் அவரின் மெலிந்த மார்பில் சிராய்ப்புக் காயங்கள் ஏற் பட்டு, அவற்றில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. காவியுடையால் அவை வெளியே தெரியாமல் மூடிக் கொள்ள முயன்றார். ஆனால், அந்தக் காவிச் சால்வையோ தாறுமாறாகக் கிழிந்து சேறும் நீருமாக மாசுற்றிருந் தது. மாசு நிறைந்த அச் சால்வை யால் தம் மாசற்ற உடலைப் போர்த் திக் கொண்டார் அவர்.

"அடியேன் எனது கடமையைச் செய்தேன். ஆனால், அடிகள் செய்த உதவியோ மலையினும் மாணப் பெரிது. தாங்கள் மட்டும் இங்கே வராமலிருந்திருந்தால் இந்நேரம் எங் கள் இளவரசரின் கதி என்ன ஆகி யிருக்குமோ?" என்று பணிவுடன் சொன்ன காங்கேயனின் உடல், பயத் தால் பதறி நடுங்கியது.

"நான் இங்கே பள்ளத்தில் விழுந்த செய்தி அடிகளுக்கு எப்படித் தெரிந் தது?" என்று அடக்க முடியாத ஆவலுடனும் வியப்புடனும் கேட் டான் மாறவர்மன்.

ின்எண்ணற்ற கருணைச் செயல்களைப் பற்றி எடுத்தியம்புவ



தென்பது இயலாத காரியம், இளவரசே! எனக்கே வியப்பாக இருக்கிறது. 'நான் இங்கே எப்படி வந்தேன் என்பதை எண்ணும் போது!'' என்று இளஞ் சிரிப்புடன் அமைதியாகச் சொன்னார் புத்தத் துறவி கௌஸாம்பி.

''இந்த விடியற்சாம நேரத்தில் அடிகளவர்கள் தம் மடத்தில் சாதுர்மாசம் நிகழ்த்துவது வழக்கமாயிற்றே! அதை விடுத்து இந்தப் பக்கம் யதேச்சையாக வருவதற்கும் ஏதேனும் ஒரு காரணம் இருக்க வேண்டும் அல்லவா?'' என்றான் மாறவர்மன் புன் சிரிப்புடன்.

''காரண காரியமின்றி உலகத்தில் எதுவுமே நிகழ்வதில்லை என்பது புத்தர் பிரானின் அருள் வாக்கு. என்னை இங்கே போகச் சொல்லி ஒரு மாயக் குரல் பணித்தது. அதன்படி உடனே புறப்பட்டு வந்தேன்.''

மாறவர்மன் விழிப்புற்றான். ''மாயக் குரலா? அல்லது ஒரு மாயையின் குரலா?'' என்று கேட்டான் மிகத் தணிவாக.

அன்பானந்தர் ஆச்சரியத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தார். சற்று நேரச் சிந்தனைக்குப் பின், ''இளவரசரின் திருத்தம் சரியானதே!'' என்றார் மென்முறுவலுடன்.

இவர்கள் பேசுவதைக் கொஞ்சமும் புரிந்து கொள்ள முடியாமல் விழித்தபடி உட்கார்ந்திருந்தான் காங்கேயன். ஆனால், இளவரசன் மாறவர்மனோ பலத்த பரபரப்புக்கு உள்ளானான். அவன் மனத்தில் பல நூறு கேள்விகள் அடுக்கடுக்காக எழுந்து திமிறின. தன்னை மிகவும் கட்டுப் படுத்திக் கொண்டு ஒன்றும் அறியாதவன் போல், ''ஏதோ, வாய்க்கு வந்ததைச் சொன்னேன். அதை அடிகள் உடனே ஆமோதித்தது எனக்கு விந்தையாக இருக்கிறது!'' என்றான்.

கௌஸாம்பி கலகலவெனச் சிரித்தார். ''இளவரசே! மனித மனம் ஒரு சுத்தமான கண்ணாடி போன்றது. அது எண்ணங்களின் அபூர்வ வடிவைப் பிரதிபலிக்கும் தன்மை வாய்ந்தது. அந்தப் பிரதிபலிப்பின் மறு உருவமே சொற்கள்; மாயத்திற்கும், மாயைக்கும் வித்தியாசம் தெரியாமல் மாறவர்மன் பேசுவார் என்று நான் நினைக்கவில்லை!'' என்று கூறி மீண்டும் சிரித்தார்.

''அப்படியே இருக்கட்டும். ஆனால், மாயை என்பதில் பலவகை உண்டே? அவற்றில் எந்த மாயையை அடிகள் குறிப்பிடுகிறீர்?''

''மண்ணும் பொன்னும் மாயைகள். ஆனால், அவை அஃறிணைப் பொருட்கள். அந்த அஃறிணைப் பொருட்கள் என்னைத் தூண்டியதால் இங்கே வந்தேன் என்று சொல்வது அபத்தம்! மூன்றாவது மாயை பெண் என்கிறார்கள். நிணமும் தசையும் ஆன்மாவும் கொண்ட ஓர் உயர்திணைப் பொருளை மாயை என்று நாங்கள் சொல்வதில்லை. அப்படிச் சொல்வது அறியாமை. ஆயினும், உலக வழக்கிலுள்ள அந்தப் பொருளற்ற சொல்லையே உங்கள் கேள்விக்குப் பதிலாகச் சொல்லி விட்டேன்!''

''அப்படியானால் அடிகளை அனுப்பியது ஒரு பெண்'' என்று அவசரமாகக் கேட்டான் மாறவர்மன்.

''அதுதான் உங்களுக்கு ஆரம்பத்திலேயே தெரிந்த விஷயமாகி விட்டதே!'' என்று சிரித்தார் கௌஸாம்பி.

''அவள் ஒரு சோனக தேசத்துப் பெண் தானே?'' என்று வினவினான் இளவரசன் துரிதக் குரலில்.

இதைக் கேட்டதும் திகைத்தவர் போல் காணப்பட்ட கௌஸாம்பி, ''சோனக தேசத்துப் பெண்ணா? இல்லையே!'' என்றார் வார்த்தைகளை இழுத்து. மீண்டும் அவரே ''உங்களுக்கு யார் இப்படிச் சொன்னது?'' என்று கேட்டார்.

''அந்தப் பெண்ணின் தமையன் சொன்னான்!''

''நீங்கள் அவனைப் பார்த்தீர்களா?''

''இருவரையும் பார்த்தேன்.''

''ஒரே சமயத்திலா?''

''இல்லை. சற்றே முன் பின்னாகப் பார்த்தேன். மதுரைக்குச் சென்றிருந்த காங்கேயன் நேற்று மாலை இந்தச் சாலை வழியே திரும்பி வருவான் என்று எதிர்பார்த்து, அவனை இங்கே சந்திக்க வந்து காத்திருந்தேன்......''

''அரண்மனையிலிருந்தே காங்கேயனின் வருகையை எதிர்பார்த்திருக்கலாமே?''

உடனே காங்கேயன் குறுக்கிட்டு, ''அது ஒரு முக்கிய விஷயம் அடிகளே!

அதற்காக இளவரசர் என்னை ஆவலுடன் எதிர்நோக்கி இங்கே வந்திருக்கலாம்!" என்றான்.

இது ஏதோ அரசியல் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதை உடனே புரிந்துகொண்ட கௌஸாம்பி, 'அது என்ன?' என்று கேட்காமல், மாறவர்மனைப் பார்த்து, "ம்......பிறகு?" என்றார்.

கௌஸாம்பியின் பெருந்தன்மையான போக்கைக் கண்டு உள்ளூற வியந்து கொண்ட இளவரசன் தொடர்ந்து சொன்னான்: "அந்தச் சமயம் திடீரெனப் பெருங்காற்று வீசி, அதோ அந்தப் புன்னைமரத்தைச் சாலையின் குறுக்கே சாய்த்துவிட்டது. இருட்டி வெகுநேரமாகியும் காங்கேயன் வராமற்போகவே, குதிரையுடன் இருந்த நான் அரண்மனைக்குத் திரும்பிச் செல்ல ஆயத்தமானேன். அச்சமயம், இந்த உப்பளத்துப் பக்கமிருந்து ஒரு பெண் ஓடிவந்து என்னிடம், 'புத்த விகாரம் எங்கே இருக்கிறது' என்று கேட்டாள். நான் வழி காட்டினேன். உடனே அவள் உங்கள் மடத்தை நோக்கி ஓடிவிட்டாள். சாலையின் குறுக்கே மரம் சாய்ந்து கிடந்ததால் இவ்வழியே இறங்கிச் சுற்றிக்கொண்டு போகலாமென்று வந்தேன். அப்போது அந்தப் பெண் ஓடிவந்த அதே பக்கமிருந்து ஓர் அராபிய வணிகன் தலைதெறிக்க ஓடிவந்தான். என்னைக் கண்டதும் திடுக்கிட்டு நின்ற அவன், 'இப் பக்கம் ஒரு பெண் வந்தாளா?' என்று பரபரப்போடு கேட்டான். நான் காரணமில்லாமல் 'இல்லை'யென்று சொன்னேன். அந்தப் பெண் அவனுடைய தங்கையென்றும், முத்துக் கொள்முதல் செய்ய வந்த இடத்தில் அவளுக்குப் புத்திக் கோளாறு ஆகிவிட்டது என்றும், அந்தக் கோளாறினால் அவள் கூடாரத்தை விட்டு ஓடி வந்துவிட்டாள் என்றும் சொல்லிப் பிரலாபித்தான். எனக்கு ஏனோ அவன் பேச்சில் சந்தேகம் தட்டியது. அவனிடம் அந்தப் பெண் சென்ற வழியைச் சொல்லாமல், கள்ளிக் காட்டைக் காட்டி விட்டேன். அவனும் உடனே அந்தக் காட்டில் தேடிப்பார்க்க ஓடிவிட்டான். பிறகுதான் காங்கேயன் வரும் குதிரைக் குளம்பொலி கேட்டது. அதற்குள் உப்பளத்தில் இறங்கிவிட்ட நான் அந்த ஒலி கேட்டு அவசரமாகத் திரும்பினேன். திரும்பிய வேகத்தில் மணல் சரிந்து நானும் என் குதிரையும் இந்தப் பள்ளத்தில் விழுந்து விட்டோம்!"

இளவரசன் இவ்வாறு சொல்லி நிறுத்தித் துறவியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். கௌஸாம்பி ஏதேனும் சொல்வார் அல்லது கேட்பார் என்று எதிர்பார்த்தான். ஆனால், அவர் வாயே திறக்கவில்லை. மௌனமாக எதைப் பற்றியோ ஆழ்ந்து சிந்தித்தவராய்த் தலைகுனிந்து கொண்டிருந்தார். நேற்றிரவு நடந்த சம்பவங்களை இளவரசன் வாயிலாக அறிந்த காங்கேயனுக்கு வியப்பும் துடிப்புமாகிவிட்டது. நான் மதுரையிலிருந்து வந்தபோது, சாலையில் சாய்ந்து கிடந்த புன்னை மரத்தைக் கண்டு இடப்பக்கக் கள்ளிக்காட்டில் புகுந்து போயிராமல், வலப்பக்கக் கடற்கரையில் இறங்கி வந்திருந்தால் இளவரசனை முதலிலேயே கண்டு அவன் இன்னலைத் தவிர்த்திருக்கலாமே என்று வருந்தினான். அவனால் வாய் திறந்து ஒன்றுமேபேச முடியவில்லை; கற்சிலை போல உட்கார்ந்திருந்தான்.

சற்று நேர அமைதிக்குப் பின், "இளவரசே! நீங்கள் இந்தப் பள்ளத்தில் தவறி விழுந்தது ஒரு மாபெரும் தெய்வச் செயல்!" என்றார் கௌஸாம்பி மிக நிதானமாக.

மாறவர்மனால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. "அடிகள் சொல்வது?..." என்று இழுத்தான்.

"அதற்குமேல் நான் இப்போதைக்கு எதுவும் கூற விரும்பவில்லை!" என்றார் துறவி உறுதியான குரலில்.

"அப்படியானால் அந்தப் பெண்ணைப் பற்றி?......"

கௌஸாம்பி இதற்குப் பதில் சொல்ல மறுப்பவர்போல் தலையைப் பலமாக அசைத்தார். இளவரசன் அந்தப் பெண்ணைப் பற்றியே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருப்பது காங்கேயனுக்குப் பிடிக்கவில்லை. அவன் சட்டென்று எழுந்து நின்று, "இளவரசே! இரவெல்லாம் உங்களைக் காணாததால் அரண்மனை ஒரே அல்லோலகல்லோலத்தில் இருக்கிறது. அன்னை திரைலோக்கியார் ஊண் உறக்கமின்றி அழுது கொண்டிருக்கிறார். மதுரையிலிருந்து நான் வந்ததும் இந்த விவரம் அறிந்து இதோ ஓடிவந்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் அரண்மனை வீரர்கள் உங்களைத் தேடிக்கொண்டு

இங்கே வந்தாலும் வந்துவிடுவார்கள். இனியும் தாமதித்தால் ஊரில் ஏகக் குழப்பமாகி விடும்!" என்றான் படபடப்பான குரலில்.

"மதுரைக்குப் போன என்ன ஆயிற்று? என் அண்ணா சடையவர்மர்..." என்று சுந்தர பாண்டியன் சொல்லி முடிப்பதற்குள் காங்கேயன் குறுக்கிட்டு, "அரசரிடமிருந்து ஓர் அதிமுக்கிய செய்தி கொண்டு வந்திருக்கிறேன். அதை அரண்மனையில் வந்து தெரிந்து கொள்ளுங்கள்!" என்றான்.

இளவரசனுக்கு அந்தப் பெண்ணைப் பற்றிய விவரத்தை அறிந்து கொள்ளாமல் இங்கிருந்து போக விருப்பமில்லை. ஆனால், கௌஸாம்பியின் மௌனமும், காங்கேயனின் அவசரமும் அவனது அந்த வேட்கையை அமுக்கி விட்டன. "அடிகளும் புறப்பட வேண்டியதுதானே?" என்று கேட்டுக் கொண்டே எழுந்தான்.

"நானா? நான் எப்படி இங்கிருந்து வர முடியும்?" என்றார் துறவி.

"ஏன்? இன்னுமென்ன இங்கே வேலை இருக்கிறது?" என்று கேட்டான் காங்கேயன்.

அன்பானந்தர் அமைதியாகச் சொன்னார்: "அதோ, என்னைப் போன்ற ஒரு ஜீவன் அந்தப் பள்ளத்தில் கிடந்து தன் உயிருக்காக மன்றாடிக் கொண்டிருக்கிறது. எனக்கும் அந்தப் பிராணிக்கும் ஜீவபரிமாணத்தில் யாதொரு வேற்றுமையும் இல்லை. என்னைப் பொறுத்தவரை எனக்கு இளவரசரின் உயிரும் அந்தக் குதிரையின் உயிரும் ஒன்றேதான். அதை மீட்டுக் கரையேற்றாமல் நான் இங்கிருந்து போகமாட்டேன். அந்தக் குதிரை இறந்தால் நானும் இங்கே இறந்து படுவேன்!"

இளவரசனும் காங்கேயனும் இதைக் கேட்டுத் தலைகுனிந்தார்கள். அதே சமயம், அவர்களைத் தேடிக் கொண்டு ஐந்தாறு வீரர்கள் அவ்வழியே வந்தார்கள். அவர்களிடம் குதிரையைக் கரையேற்றிக் கொண்டு வரும் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, துறவியிடம் விடைபெற்றுக் கொண்டு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் போனபின், அன்பானந்த கௌஸாம்பி தமது புத்த மடாலயத்திற்குச் செல்லாமல், ஏனோ அந்தக் கள்ளிக் காட்டினுள்ளே புகுந்து விரைந்தார்! (தொடரும்)


உங்கள் குழந்தையையும்
குதூகல மடையச் செய்யும்

ஸ்பென்ஸர்ஸ்
கிரைப் ஸிரப்




குழந்தைகளுக்கு வரும் கோளாறுகளைப் போக்கும் சிறந்த மருந்து.

வயிற்றை இறுக்கிப் பிடித்துத் துன்புறுத்தும் நோயின் சின்னங்கள், வாயு பரிதல், உப்புசம், சிறிய வலிப்புகள், அதிகமான புளிப்புத்தட்டல், மந்தம், ஆகியவைகளை விரைவில் சாந்தப்படுத்துகிறது. பல் முளைக்கும் பருவத்துக்கு சிறப்பாக உபயோகிக்கத்தக்கதென்று சிபார்சு செய்யப்படுகிறது



சென்னை (புதுச்சேரி உள்பட), கேரளம் & மைசூர் ராஜ்யங்களுக்குப் பூரண வினியோகஸ்தர்கள்:
டிரக் (ஹ்) ஹவுஸ்
தேர் நிலையம், சேலம்—1
கிளைகள்: சென்னை & பெங்களூர்.

# ஆலவாய் அழகன்

## அத்தியாயம் மூன்று

## பழைய கதையும், பாடிய குயிலும்!

"பெற்ற புதல்வனை நின்பேரென்று முன்காட்டி
வெற்றி யரியணைக்கீழ் வீழ்ந்து ......"

— மெய்க்கீர்த்தி

திருமகளின் பேரன்புக்கு உரித்தான கொற்கை நகர் அன்று திருவழிந்து காணப்பட்டது. இரவு பகல் எந்நேரமும் களிதுளும்பும் வீதிகளும், வாணிபச் சாலைகளும், ஆடற்பாடல் அரங்கங்களும், தண்ணருஞ் சோலைகளும் ஜனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன. கல்விக் கழகங்களும், கவின்பெறு நூல்நிலையங்களும், அரசாங்க அலுவலகங்களும், அக்கசாலைகளும், ஆதுல விடுதிகளும் மனித அரவமின்றி மூடிக் கிடந்தன. முத்துச் சலாபமும், சங்குச் சேகரிப்பும்கூட அன்று நடைபெறவில்லை. அதனால், சங்கறுத்து வளை இயற்றும் பெருந் தொழிற்சாலைகளும், முத்தணிகள் சிருஷ்டிக்கும் கலைக்கூடங்களும் சாத்திக் கிடந்தன. நகரின் இந்த ஸ்தம்பித நிலையைப் பன்மடங்கு விஸ்தாரித்து வைத்தது, மப்பும் மந்தாரமுமாய்க் கறுத்துக் கிடந்த வானம்!

பொழுது புலர்ந்து புட்கள் குரலெடுக்கும் நேரத்தோடு நகரில் வதியும் மக்களனைவரும் எழுந்து உற்சாகம் கரைபுரள அவரவர் பணிகளை மேற்கொள்ளச் செல்வது வழக்கம்.

ஆனால், இன்றோ, விடிந்து வெகு நேரமாகியும், ஆடவர் பெண்டிர் சிறார் அனைவரும் தத்தமது இல்லங்களில் முடங்கிக் கிடந்தனர். வாசலைப் பெருக்கி மாக்கோலமிடும் வளையணிந்த கரங்களைக் காணாமல் ஏங்கின நீண்டநெடும் வீதிகள்; செப்புக்குடமேந்தி வரும் சிற்றிடைகளைப் பார்க்காமல் சலனமற்றுக் கிடந்தன நீர்த்துறைகள்; வாளேந்தி சமர்ப் பயிற்சி புரியவரும் வளமார் காளைகளைச் சந்திக்காமல் புழுதி தணிந்து இருந்தன புற்சதுக்கங்கள்; ஊஞ்சல் தேடி உலையும் பிஞ்சுக் கைகளை ஸ்பரிசிக்காமல் உப்புப் பூத்துக் கிடந்தது கடற்கரை மணல்வெளி; இறைவனுக்குச் சாற்ற எடுத்துத் தொடுக்கும் வண்ணப் புது மலர்கள் பறிபடாமல் உதிர்ந்து கிடந்தன பூங்காக்களில்! இப்படிக் கொற்கை நகர் எங்கும், அணை கட்டித் தேக்கிய அவலம் கொலுவேறி யிருந்தது.

நகரின் இந்த உயிரற்ற சவநிலைக்குக் காரணம் என்ன? — மதுரையிலிருந்து காங்கேயன் கொண்டு வந்த செய்தி, அரண்மனையிலிருந்து எப்படியோ வெளியேறி, விடிவதற்குள்

கக்ரெங்கும் காட்டுத் தீபோல் பரவி விட்டது!

'மதுரை அரண்மனையில், பாண்டியப் பேரரசரான சடையவர்மன் குலசேகரன் மரணப் படுக்கையில் கிடக்கிறார்.'—

இந்தச் செய்தியே கொற்கையை இருநிலையில் ஆக்கி வைத்திருந்தது!

"அம்மா!"

அரண்மனை ஆலோசனை மண்டபத்தின் ஒரு சாளரத்தருகில் அமர்ந்து எல்லையற்ற சோகத்தில் ஆழ்ந்திருந்த மகாராணி திரைலோக்கியமுழுதுடையாள் இந்தக் குரல் கேட்டு மெள்ளத் தலைநிமிர்ந்தார். நெடுந்தூரப் பயணத்திற்கேற்ற உடையணிந்து மெதுவாக உள்ளே வந்து கொண்டிருந்தான் இளவரசன் மாறவர்மன். தன் மகனைக் கண்டதும் மகாராணியின் துக்கம் பீரிட்டுக் கொண்டது. கண்கள் புனலென நீரைக் கொட்டின.

தாயின் துக்கம் பொங்கும் முகத்தைக் காணச் சகியாமல் தலைகுனிந்தபடி வந்து அங்கிருந்த ஒரு சிறிய ஆசனத்தில் அமர்ந்தான் மாறவர்மன் சுந்தரன்.

சற்று நேரம் அங்கே பேரமைதி சூழ்ந்தது. அந்த அமைதியை மெல்லக் கலைத்து, "அம்மா! நான் மதுரைக்குச் செல்ல ஆயத்தமாகி விட்டேன். தங்கள் மூத்த மைந்தருக்கு என் மூலம் தாங்கள் அளிக்க விரும்பும் செய்தியை அளித்தருளுங்கள்!" என்றான் மாறவர்மன் வெகு பவ்யமுடன்.

அருவியென நீர் சுரந்த கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டு "அன்புச் செல்வனே! உன் அண்ணனுக்கு இந்தத் துர்ப்பாக்கியசாலி என்ன செய்தி சொல்லப் போகிறேன்? என் மகன் சடையவர்மனுக்கு நீண்ட ஆயுளைத் தரவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இதைத் தவிர வேறு நான் என்ன கூற விருக்கிறது?" என்றார் மகாராணி, துக்கம் தொண்டையை அழுத்த.

தலையைத் தாங்கிப் பிடித்தபடி சிறிது நேரம் மௌனமாயிருந்த மாறவர்மன் பணிவுடன் சொன்னான்: "அம்மா, நீங்களும் என்னுடன் மதுரைக்கு வந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணுகிறேன். நோய்ப் படுக்கையில் கிடக்கும் அண்ணுவுக்கு உங்கள் முகத்தைக் கண்டால் மிகவும் ஆறுதலாயிருக்கும். அதுவே அவர் நோய்க்கு அருமருந்தாகவும் அமையக் கூடும்."

"உண்மைதான் மகனே! ஆனால், காங்கேயன் கொண்டு வந்த செய்தியைப் பார்த்தால், சடையவர்மன் மீண்டும் பிழைத்தெழுவான் என்ற நம்பிக்கையே கொள்ள முடியவில்லை. என் மைந்தனின் சவத்தைப் பார்க்கவா நான் மதுரை செல்ல வேண்டும்? அதைவிட இந்த அரண்மனையில் தனித்துக் கிடந்து அழுது கொண்டிருப்பதே எனக்கு ஆறுதல் அளிக்கும்."

"இல்லை, அம்மா! நான் மதுரைக்கு விரைவில் வந்து சேர வேண்டுமென்பதற்காகச் செய்தியை மிகைப் படுத்தி யிருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது."

"எப்படியிருந்தாலும் நான் அங்கு இப்போது செல்வது அத்தனை உசிதமாக இராது."

"ஏன் இப்படிச் சொல்கிறீர்கள் அம்மா?"

"என்னைவிட உன் மீது குலசேகரன் மிகுந்த வாஞ்சை வைத்திருக்கிறான். எனவே, நீ அவனை விரைவில் சென்று பார்ப்பதே நலம்."

"தாயின் முக தரிசனத்தைக் காட்டிலும் இந்தத் தரணியில் வேறென்ன சஞ்சீவி இருக்கிறது? உங்களைப் பார்த்தால் அண்ணுவின் உடல் நிச்சயம் குணம் பெறும் அம்மா!"

திரைலோக்கியார் தம் மகனைக் கவலையுடன் நிமிர்ந்து பார்த்தார். அந்தப் பார்வை, அவர் ஏதோ ஒன்றைச் சொல்ல விரும்புவது போலவும், ஆனால், அதை வெளியிடத் தயங்குவது போலவும் தோன்றியது. மாறவர்மன் அமைதியாகத் தன் தாயை ஏறிட்டுப் பார்த்தான்.

சற்று நேரம் கழித்து திரைலோக்கியார் மிகவும் நிதானமாகச் சொன்னார்: "மகனே! உன்னிடம் இன்று நான் ஒரு புதிய செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இந்நாள் வரை அவ் விஷயத்தை உன்னிடம் கூறாமல் இருந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அதையெல்லாம் இப்போது விளக்கி

யாக வேண்டிய அவசியமில்லை. உனக்குத் தெரிய வேண்டிய விஷயம் இது ஒன்றேதான்: இன்றையப் பாண்டி மன்னனான சடையவர்மன் குலசேகரன் உனது அண்ணனல்லன்! அவன் உன்னுடன் பிறந்த சகோதரனுமல்லன்!”

இதைக் கேட்டதும் பலத்த அதிர்ச்சிக்கு உள்ளானான் மாறவர்மன். ஏதும் பேசக்கூட இயலாமல் திணறினான். மகாராணி இதை எதிர்பார்த்தவர்போல் மீண்டும் அமைதியாகத் தொடர்ந்து சொன்னார்:

“வியப்பை அடக்கிக் கொண்டு, கவனமாகக் கேள், செல்வனே! உன் தந்தை மாறவர்மர் விக்கிரம பாண்டியரின் தந்தையான சடையவர்மர் குலசேகர பாண்டியர் அப்போது திருநெல்வேலியிலிருந்து கொண்டு தென்பாண்டி நாட்டை அரசாண்டு வந்தார். அவருடைய தாயத்தினராகிய பராக்கிரம பாண்டியர் மதுரையிலிருந்து வடபாண்டி நாட்டை ஆண்டு வந்தார். இவர்களுக்குள்ளே அடிக்கடி போரும் பூசலும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இறுதியில் உன் தாத்தா குலசேகர பாண்டியர் ஒரு பெரும் படையுடன் சென்று மதுரையை முற்றுகையிட்டார். இதை யறிந்த பராக்கிரம பாண்டியர், அப்போது ஈழப்பேரரசனாயிருந்த பராக்கிரம பாகுவைத் தமக்குப் படையனுப்பி உதவுமாறு வேண்டிக்கொண்டார். அவனும் உடனே இலங்காபுரித் தண்டநாயகன் என்பானின் தலைமையில் ஈழப்படை ஒன்றை அனுப்பி வைத்தான். அந்தப் படை பாண்டிநாட்டிற்கு வருமுன், குலசேகர பாண்டியர், பராக்கிரம பாண்டியரை வென்று, அவரையும் அவரது மனைவி மக்களையும் கொன்று, மதுரையைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால், சிங்களப்படையுடன் வந்த இலங்காபுரித் தண்டநாயகன் திரும்பிப் போகாமல் பெருஞ்சினத்துடன் குலசேகர பாண்டியரைத் தாக்கினான். இராமேச்சுரம், குந்துகாலம் முதலான ஊர்களில் பெரும்போர் நடைபெற்றது. அப்போரில் குலசேகரர் தோற்று விட்டார். ஆயினும் அவர் சளைக்காமல், கொங்குநாட்டிலிருந்த தம் மாமன் படைகளையும், சிதறிக் கிடந்த பராக்கிரம பாண்டியரின் படைகளையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு, தண்டநாயகனை எதிர்த்தார். அதிலும் அவர் தோல்வியடையவே, தண்டநாயகன் மதுரையைக் கைப்பற்றி, கொலையுண்ட பராக்கிரம பாண்டியனின் கடைசிப் புதல்வனும், மலைநாட்டில் ஒளிந்து கொண்டிருந்தவனுமான வீரபாண்டியன் என்பானை அழைத்து அவனிடம் பாண்டி நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தான். அத்துடன், கீழைமங்கலம், மேலைமங்கலம் முதலான ஊர்களைக் கண்டதேவ மழவராயன் என்பவனுக்கும், தொண்டி, கருந்தங்குடி, திருவேம்பகம் முதலான ஊர்களை மழவச்சக்கரவர்த்தி என்பவனுக்கும் அளித்து, அவர்களைப் பாண்டி நாட்டின் எல்லைப்புறச் சிற்றரசர்களாக ஆக்கி வைத்தான். வேற்று நாட்டுப் படைத்தலைவனான ஒருவன் இங்கே வந்து தன் இஷ்டத்திற்கும் நாட்டைக் கூறு போட்டு அளிப்பதைக் குலசேகர பாண்டியரால் சகிக்க முடியவில்லை. அவர் பல தந்திரங்கள் செய்து, கண்டதேவ மழவராயனையும், மழவச் சக்கரவர்த்தியையும் தன்பால் சேர்த்துக் கொண்டு தண்டநாயகனைத் திடீரெனத் தாக்கிப் புடைத்தார். அந்தப் போரில் திணறிய தண்டநாயகன், ஈழத்திற்கு ஓலையனுப்பித் துணைப் படையொன்றை வேண்டினான். பராக்கிரமபாகு உடனே ஜகத்விஜய தண்டநாயகன் என்பவனின் தலைமையில் மற்றொரு படையை அனுப்பி வைத்தான். அந்த இரு தண்டநாயகர்களும் வீராவேசமுடன் குலசேகர பாண்டியரைத் தாக்கினர். குலசேகரர் மூன்றாம் முறையாகத் தோற்றோடினார். வீரபாண்டியன் மீண்டும் மதுரை அரியணையில் ஏறிக் கொண்டான். மறுபடியும் நாலாவது முறையாக சிவில்லிப்புத்தூரில் குலசேகரர் போர் தொடுத்து அதிலும் தோல்வியே கண்டார்!...”

திரைலோக்கியமுழுதுடையாள் தம் பேச்சை நிறுத்தி விட்டுச் சற்று நேரம் மௌனமாயிருந்தார். இவ்வளவு நேரம் மிகக் கவனமாகவும் மிகுந்த ஆவலோடும் கேட்டுக் கொண்டிருந்த மாறவர்மன், தன் தாயையே இமைக்காமல் பார்த்தான். அவனது ஆவலைத் தெரிந்து கொண்ட மகாராணி மீண்டும் தம் பேச்சைத் தொடர்ந்தார்:-

“[illegible]வாறு சிங்களவரிடம் பன்முறை தோல்வியுற்று பல இன்னல்



களை அனுபவித்த குலசேகர பாண்டியர், சோழநாட்டிற்குச் சென்று, அப்போது ஆட்சி புரிந்து கொண்டிருந்த இரண்டாம் இராஜாதிராஜனைத் தமக்கு உதவி புரியுமாறு வேண்டினார். ஈழ நாட்டின் செல்வாக்குத் தமிழகத்தில் பரவி வருவதை விரும்பாத அவன் உடனே திருச்சிற்றம்பலமுடையான்






*சபா காரியதரிசி* :— ''தாய்மார்கள் கவனிக்கவும்... குழந்தைகள் அழுவதற்காக இப்போது பத்து நிமிடம் அவகாசம் கொடுக்கப்படும்...''

பெருமானம்பிப் பல்லவராயன் என்னும் மாவீரனொருவனின் தலைமையில் படையுதவி அளித்தான். சோழப் படைக்கும், இலங்காபுரித் தண்டநாயகர்களுக்கும், தொண்டி, பாசிப்பட்டணம் முதலான ஊர்களில் பெரும் போர் நடந்தது. அந்தப் போரிலும் தோல்வியே அடைந்தார் உன் தாத்தா! அதற்கடுத்து, மீண்டும் சோழப் படைகள் சிங்களப்படைகளைத் தாக்கின! திருச்சிற்றம்பலமுடையான் அந்தப் போரில் மாவீரம் விளைத்து வெற்றி கண்டான். தோற்றோடிய இலங்காபுரித் தண்டநாயகர்களின் தலைகளைக் கொய்து வந்து மதுரைக் கோட்டை வாயிலில் யாவரும் காணும்படி மாட்டி வைத்தான். குலசேகரப் பாண்டியரைப் பாண்டி நாட்டின் மன்னராக முடிசூட்டியும் வைத்தான்! இதை அறிந்த ஈழமன்னன் பராக்கிரமபாகு, மீண்டும் போர்த் தொடுக்க முயன்று முடியாமற் போகவே, குலசேகரருக்குப் பல உயர்ந்த பரிசில்களை அனுப்பி வைத்துத் தன் மகளையும் அவருக்கு மணம் செய்வித்தான்! இதனால் மனம் மகிழ்ந்து

போன குலசேகரர், நேற்று வரை தமக்கு மாபெரும் விரோதிகளாய் இருந்த சிங்களவருடன் கூடிக் குலாவினார்! அதோடு நில்லாமல், தமக்குப் பயன் கருதாமல் உதவி புரிந்த சோழனையும் பகைத்துக் கொண்டார்! தமக்கு ஆதிமுதல் பெருந் துணையா யிருந்த இராஜராஜக் கற்குடிமாராயன், இராஜகம்பீர அஞ்சுக் கோட்டை நாடாழ்வான் முதலான பாண்டியப் படைத் தலைவர்களைக் காரண மின்றி வெள்ளாற்றுக்கு வடக்கே ஓடி விடும்படிக் கட்டளையிட்டார்! இதனால் பெருஞ்சினம் கொண்ட இராஜாதி ராஜ சோழன், நன்றிகொன்ற குலசேகரரை நிர்மூலமாக்க, தன் அமைச்சன் வனமுடையான் அம்மையப்பன் அண்ணன் பல்லவராயனைப் படைகளுடன் அனுப்பினான். அதன்படி வேதவனமுடையான் ஒரு சில நாட்களில் மதுரையைக் கைப்பற்றிக் குலசேகரரை விரட்டி யடித்துப் பழைய வீரபாண்டியனுக்கே பாண்டி நாட்டின் ஆட்சி உரிமையை அளித்து விட்டான்! இதனால் குலசேகரர் தம் வாழ்நாளெல்லாம் மறைந்து வாழ்ந்து இன்னல் பல அனுபவித்து இறந்தொழிந்தார். அவரது ஒரே மைந்தரான உன் தந்தை விக்கிரம பாண்டியர் தம் தந்தை செய்த தவற்றினால் நாடோடி போல் சுற்றியலைந்து கொண்டிருந்தார்!... இதற்கிடையில், சோழநாட்டில் இரண்டாம் இராஜாதி ராஜன் காலமாகி, மூன்றும் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தான். அவன் சோழ மன்னனானதுமே, இதுவரை சோழ நாட்டிற்கு அடங்கியிருந்து வந்த வீர பாண்டியன் தறுக்கித் தலைநிமிர்ந்தான். குலசேகரர் செய்தது போலவே அவனும், சோழன் செய்த உதவிகளை மறந்து, சிங்கள மன்னனுடன் கூடிக் குலாவினான். இதுதான் சமயமென்று உன் தந்தை விக்கிரம பாண்டியர் குலோத்துங்கனிடம் போய்த் தஞ்சமடைந்தார். உடனே, மூன்றும் குலோத்துங்கன் மதுரையின்மேல் படை திரட்டிச் சென்று, வீரபாண்டியனையும் அவனுக்கு உதவி புரிய வந்த சிங்களப் படைகளையும் சின்னாபின்னமாக்கிப் பாண்டிய அரசைக் கைப்பற்றி, விக்கிரமபாண்டியரிடம் ஒப்படைத்தான். உன் தந்தை பாண்டி நாட்டின் மன்னரானார்!... பிறகு, தோற்றோடிய வீரபாண்டியன் சேரமன்னன் உதவி பெற்று படையெடுத்து வந்தான். நெட்டூரில்

அவனைத் தடுத்து நிறுத்திய குலோத்துங்கன், சேரப்படைகளையும் வீரபாண்டியனையும் சிதறடித்து விரட்டினான். அது முதல் விக்கிரம பாண்டியரே பாண்டி நாட்டை அமைதியுடன் ஆண்டு வந்தார்...'' என்று சொல்லி நிறுத்திய திரைலோக்கியார், கம்மிய குரலில் மீண்டும் தொடர்ந்தார் :

'' மாறவர்மா! இனிமேல் தான் நான் சொல்லப் போவதை நீ கவனமாகக் கேட்க வேண்டும். விக்கிரம பாண்டியர் பாண்டிநாட்டின் ஆட்சியுரிமை பெற்ற அடுத்த ஆண்டு எனக்கும் அவருக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணமான ஆறு மாத காலம்வரை நான் இன்பச் சிகரத்தின்மீது ஏறி நின்று வாழ்க்கையின் சகல சுகங்களையும் அனுபவித்தேன். ஒரு கண நேரமும் என்னை விட்டுப் பிரியாமல் இருந்து வந்த உன் தந்தை திடீரென ஒரு நாள் சோழ நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆட்சி யுரிமை நல்கிய சோழனுக்கு நன்றி காட்டு முகத்தான் அவர் சோணாடு சென்றிருக்கிறார் என நான் எண்ணிக் கொண்டேன். அவரும் போனவுடன் திரும்பி வந்து விட்டார். ஒரு மாதம் கழித்து மீண்டும் சோணாடு சென்றார். திரும்பி வர சற்று நாளாகியது. பிறகு அடிக்கடி 'குலோத்துங்கனைப் பார்க்கப் போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு போவதும் வருவதுமாக இருந்தார். நாளடைவில் எனக்கு அவர் மீது ஏதோ ஒருவித சந்தேகம் ஏற்பட்டது. வழக்கம்போல் ஒரு சமயம் அவர் சோழநாடு சென்றபோது, என் நம்பிக்கைக்குரிய ஓர் ஒற்றனை அவர் பின்னால் அனுப்பி வைத்தேன். அவர் தலைநகரில் இல்லாத போதெல்லாம் நானே ராஜ்ய அலுவல்களைக் கவனித்துக் கொண்டதால் இவ்வாறு என்னால் செய்ய முடிந்தது. ஒற்றன் வந்து ஒரு திடுக்கிடும் செய்தியைச் சொன்னான் : மதுரையிலிருந்து செல்லும் அவர், கங்கைகொண்ட சோழபுரம் போகாமல் நாகைப்பட்டினத்திற்குப் போகிறார் என்றும், ஆனால் அவர் அங்கே யாரிடம் போகிறார் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லையென்றும் அந்த ஒற்றன் சொன்னான். எனக்கு ஒரே குழப்பமாகி விட்டது. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் எப்போதும்போல் இருந்து வந்தேன். இப்படியே மூன்றாண்டுகள் முடிந்தோடின!... மன்னரின் போக்கில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அவர் சோழநாடு போவதை அடியோடு நிறுத்தி விட்டார். எனக்கு இது பெருத்த ஆறுதலாயிருந்தது. ஆறு மாதங்கள் அமைதியாகச் சென்றன. ஒருநாள் காலை நான் துயிலினின்று எழுந்து மஞ்சத்தில் உட்கார்ந்தேன். என்ன ஆச்சரியம்! நான் படுத்திருந்த கட்டிலின் ஒரு மூலையில் இரு பச்சைக் குழந்தைகள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தன! ஒன்று ஆண் குழந்தை; மற்றொன்று பெண் குழந்தை! மூன்று மாதமே நிரம்பப் பெற்ற அவை இரட்டைக் குழந்தைகள்போல் ஒரே மாதிரி தோற்றமளித்தன!... திகைத்துக் குழம்பிய நான் இச் செய்தியை உடனே மன்னருக்குத் தெரிவித்தேன். அவர் அதைக் கேட்டு எவ்விதச் சலனமும் காட்டவில்லை. ஆழ்ந்த யோசனைக்குப் பின், 'சரி; இறைவன் உனக்கு இரண்டு குழந்தைகளைக் கொடுத்திருக்கிறார். அவற்றை வளர்த்து ஆளாக்குவது உன் பொறுப்பு. ஆனால் ஒன்று : இவ்விரண்டு குழந்தைகளும் உனக்குப் பிறந்தவை என்றே வெளியுலகம் இறுதிவரை நம்பும்படி நீ நடந்து கொள்ள வேண்டும். உன்மீது நான் வைத்திருக்கும் அன்பின் பெயரால் இதை வேண்டுகிறேன்' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். கணவரின் கட்டளையைக் கடவுளின் கட்டளையாக ஏற்று நிறைமன மகிழ்ச்சியுடன் அந்தக் குழந்தைகளை என் குழந்தைகள்போல் வளர்த்து வந்தேன். 'அவை யாருடைய குழந்தைகள், அரண்மனை அந்தப்புரத்திற்கு அவை எப்படி வந்தன, அரசர் அவற்றை வளர்க்கச் சொன்ன காரணம் என்ன' என்பதையெல்லாம் அறவே மறந்து, அக் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாய்ப் போற்றி வளர்த்தேன். அரசரும் அந்தக் குழந்தைகள்மீது தம் உயிரையே வைத்திருந்தார்!... பையனுக்கும் பெண்ணுக்கும் நான்கு வயது ஆகியது. அவர்கள் ஒருநாள் அரண்மனை நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கோயிலுக்குப் போயிருந்த நான் திரும்பி வந்தபோது அந்தத் திடுக்கிடும் செய்தி கிடைத்தது. தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரு பிள்ளைகளில், பெண் பிள்ளை எங்கோ காணாமற் போய்விட்டது!... எனக்கு உலகமே இருண்
உன் தந்தையோ மூர்ச்சையாகி
ட்டார். எங்கள் அருமைச்

செல்வியை நாடெங்கும் தேடிப் பார்க்க ஆட்களை அனுப்பினோம். என்ன தேடியும் என் மகளைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை!....மூர்ச்சையான உன் தந்தையைக் கட்டிலில் கொண்டு போய்க் கிடத்தினோம். அன்று படுத்தவர், அதே படுக்கையில் ஐந்தாண்டுகள் வரை சித்தசுவாதீனமிழந்து கிடந்தார். காணாமற்போன பெண் குழந்தையைப் பற்றியே அவர் இரவும் பகலும் ஏதேதோ உளறிப் புலம்பிக் கொண்டிருந்தார். ஊண் உறக்கம் ஒழித்த அவர், நாளுக்கு நாள் துரும்பென இளைத்து உயிர் துறந்தார்!...... அப்போது உன் அண்ணனுக்கு வயது பத்து. அவனுக்கு உனது தந்தையின் தந்தையான சடையவர்மர் குலேசகர பாண்டியரின் பெயரையே சூட்டப் பட்டது. விக்கிரம பாண்டியர் இறந்த பின், மிகவும் இளைஞனாயிருந்த சடையவர்மன் குலசேகரன், பாண்டிய மன்னனாக மணிமுடி ஏற்றான். சோழ மன்னன் குலோத்துங்கனது பேருதவியினால் பாண்டிய அரசியல் விவகாரங்களை நானே கவனித்துக் கொண்டேன். குலோத்துங்கன், குலசேகரன் மீது அளப்பரிய அன்பு வைத்து அவனுக்கு எல்லா உதவிகளையும் செய்து வந்தான். குலசேகரன் பதினாறாம் வயதை அடைந்ததும், பாண்டிய அரசியலின் எல்லாப் பொறுப்புக்களையும் அவனிடமே ஒப்படைத்து விட்டு, நான் உன்னை அழைத்துக் கொண்டு இந்தக் கொற்கை நகர் அரண்மனைக்கு வந்து சேர்ந்தேன்!... இப்படிப் பாண்டிய மன்னனான குலசேகரன் இன்றுவரை என்னையே அவனுடைய சொந்த அன்னையாக எண்ணிப் போற்றி வருகிறான். நானும் அவனை என் மூத்த மகனாகவே கொண்டு நேசித்து வருகிறேன். ஆனால்...'' என்று தம் நீண்ட பேச்சை ஏனோ முடிக்காமல் இழுத்து நிறுத்தினார் மகாராணி.

வியப்பும் திகைப்பும் எழுப்பிய துடிப்புணர்ச்சியின் சிகரத்தில் வீற்றிருந்த மாறவர்மன் தன் தாயின் 'ஆனால்...' என்ற இழுப்பிற்கு அடுத்துள்ளதை அறியப் பெரிதும் ஆவல் கொண்டான்.

இதுவரை வறண்டிருந்த திரைலோக்கியாரின் கண்கள் இப்போது நீரைப் பிழிந்து சிவந்தன. விம்மும் குரலில் அவர் சொன்னார் : ''மகனே! எனது அருமைச் செல்வன் குலசேகரன், கடந்த இரண்டாண்டுகளாக ஏனோ என்னை உதாசீனப் படுத்தி வருகிறான். அவன் குணமே இப்போது முற்றிலும் மாறிவிட்டிருக்கிறது. ஆயினும் எனக்கு ஒரு திருப்தி : குலசேகரன் என்னைத்தான் ஒதுக்கி வைக்க முயல்கிறானே தவிர உன் மீது முன்னிலும் அதிகமாக அன்பு காட்டுகிறான். இதன் காரணத்தை என்னால் இன்றுவரைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஒருவேளை அவனுக்கு அந்த இரகசியம் யார் மூலமாவது தெரிந்து விட்டதோ என்றும் அஞ்சுகிறேன்!...... எனவேதான், இப்போது நான் மதுரைக்கு வரத் தயங்குகிறேன். ஆனாலும், அவன் உடல் நலமின்றிக் கிடக்கிறான் என்ற செய்தியைக் கேட்டதிலிருந்து என் உள்ளம் என்ன வேதனைப் படுகிறது தெரியுமா?...'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவருக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்துவிட்டது.

மாறவர்மன் தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் பலத்த யோசனையில் ஆழ்ந்தான்.

இந்தச் சமயம், அவசரமாக அங்கு வந்த காங்கேயன், ''இளவரசே! நாம் மதுரைக்குப் புறப்பட எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டேன். புறப்படலாமா?'' என்று கேட்டான்.

அவன் இப்படிச் சொல்லி வாய மூடும்போது, எங்கிருந்தோ ஒரு மாங்குயில் கூவும் சப்தம் கேட்டது. அந்த இனிய குரலைக் கேட்டதும் திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்தான் மாறவர்மன். சுற்று முற்றும் பரபரப்புடன் திரும்பிப் பார்த்தான். அந்தக் குயிலின் குரலைக் கேட்ட மாத்திரத்தில் அவனுக்கு ஏதோ ஒரு நினைவு இழைந்தோடி வந்தது போல் கண்கள் பளிச்சிட்டன. ஒன்றிரண்டு விநாடிகளுக்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுந்து, ''காங்கேயா! நான் மதுரைக்குச் செல்லுமுன் புத்த மடாலயத்திற்குச் சென்று அன்பானந்த கௌஸாம்பியைச் சந்திக்க விரும்புகிறேன். இன்று மாலை நீ நேரே புத்தமடாலயத்திற்கு வா! அங்கிருந்து நாம் இருவரும் மதுரைக்குச் செல்வோம்!'' என்றான்.

இதைக் கேட்டுக் காங்கேயனின் முகம் வெளுத்தது. அவன் மௌனமாக வெளியேறினான்!

(தொடரும்)

# ஆலவாய் அழகன்

## அத்தியாயம் நான்கு

## புத்தவிகாரில் தோன்றிய புதிர்!

" ஐயப் படாத வருமறைதே ரந்தணர்வாழ்
தெய்வ......திருவெல்லை யுட்புக்கு......"  — மெய்க்கீர்த்தி.

நிசப்தம் குடியேறிய அந்த நீண்ட சாலையில் அதுவேகமாகத் தன் குதிரையைச் செலுத்திச் சென்றுகொண்டிருந்தான் இளவரசன் மாறவர்மன். வலப்பக்கம் திரும்பினால் விசாலமான வெண்மணல் பரப்பும், அதையடுத்து நீலக்கடல் விரிப்பும் நேத்திரானந்தமாகத் தோன்றின. இடப் பக்கம் திரும்பினால் பால்வடியும் கள்ளிமரங்களும் பசுமையான களாச்செடிப் புதர்களும் மனக்குளிர்ச்சியை உண்டு பண்ணின. சாலையின் இருமருங்கும் ஐந்து 'கோல்' தூரத்திற்கு ஒன்றாகப் புன்னை மரங்களும், புளிய மரங்களும், கொன்றை மரங்களும், குருந்த மரங்களும் கோயிலென வானுயர்ந்து, கூடமெனக் கிளை பரப்பி வளர்ந்து நின்றன. அழுக்கு மேகங்களிடையே கதிரவன் தூங்கிக் கொண்டிருந்ததால் அம்மரங்கள் நிழல் பரப்ப மறந்து மேல்காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. கடற்கரை வான்வெளியில் வெண்ணிறக் கொக்குகளும் செங்கால் நாரைகளும் தமது பனைபடு கிழங்கு பிளந்தன்ன அலகுகளை நீட்டிக் கமுகப் பாளையையொத்த சிறகுகளை விரித்துக் கட்புலனுகராக் கனச் சித்திரம் தீட்டுவதுபோல் பறந்து கொண்டிருந்தன. இத்தகைய இனிய காட்சிகளிலெல்லாம் தன் கண்ணையும் மனத்தையும் சஞ்சரிக்க விட்டுச் சென்று கொண்டிருந்தான் மாறவர்மன்.

நேற்றிரவு வீசிய பெருங் காற்றால் சாலையின் குறுக்கே சாய்ந்து விட்ட அந்தப் புன்னை மரத்தருகில் குதிரை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அந்தப் பெரிய மரம் இப்போது சாலையை அடைத்துக் கொண்டிருக்கவில்லை. பொழுது விடிந்ததுமே மராமத்து அதிகாரிகள் வந்து உடனடியாக அம்மரத்தை அப்புறப்படுத்திச் சாலையின் போக்குவரத்தை நேராக்கி விட்டிருந்தார்கள். எனினும் அந்த மரம் விழுந்த இடத்தில் வதங்கிய இலைகளும் சிறுசிறு மிலாறுகளும் சிதறிக் கிடந்தன.

அந்த இடத்தைக் குதிரை நெருங்கியதும் ஒரு முறை அது கனைத்து விட்டு, மிரட்சியுடன் பாய்ந்து ஓடியது. கடிவாளத்தை இறுகப் பற்றிக் கொண்டு வலது பக்கம் தன் பார்வையைத் திருப்பினான் மாறவர்மன். சற்றுத் தொலைவில் அந்தப் பெரிய பள்ளம் இருப்பது தெரிந்தது. அதைப் பார்த்ததுமே அவனை அறியாமல் அவன் உள்ளமும் உடலும் ஒருகுலுங்குக் குலுங்கி அதிர்ந்தன. அதைத் தொடர்ந்து அவன் மனத் திரையில் அன்பானந்த

கௌஸாம்பி ஒருகணம் தோன்றி மறைந்தார். பிறகு? ...... அந்தச் சோனக வணிகனின் முரட்டு உருவம்!......அவன் ஓடி மறைந்த கள்ளிக்காட்டைத் திரும்பிப் பார்த்தான். அதற்குள் குதிரை வெகு தூரம் சென்று விட்டது.

இப்போது அந்தக் குதிரை அவ்விடத்தை—புத்த விகாரத்திற்கு வழி கேட்ட பெண்ணை மடக்கி நிறுத்திய இடத்தை—நெருங்கிக் கொண்டிருந்தது. வேகமாக ஓடிய குதிரையின் கடிவாளத்தை ஏனே அவன் இழுத்து அதன் நாலுகால் பாய்ச்சலைப் பெருநடையாக்கினன். அவனது உள்ளத்தில் இனம்புரியாத ஒருவித மகிழ்ச்சியும் அதனேடு கலந்த மருட்சியும் மூகிழ்த்தன. தன் இரு செவிகளிலும் எங்கிருந்தோ மாயமாக எழும்பிய இன்னெலியொன்று ரீங்காரமிடுவதுபோல் தோன்றியது. அந்த இனிய குரல் அவனது மெல்லுணர்ச்சிகளை இதமாக வருடியது.

பெருநடை போட்டு நடந்து சென்ற குதிரை பொறுமையிழந்து விட்டதால் திடீரென நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்தோட ஆரம்பித்தது. தவிர்க்க முடியாத ஏதோ ஒரு மயக்க நிலைக்கு ஆளான அவன், அதன்போக்கிலேயே விட்டு விட்டான்!

கொற்கைத் துறைமுகத்திலிருந்து துவங்கி, மதுரைக்குச் செல்லும் அந்தச் சாலையின் பத்தாவது புள்ளடிக் கல்லைக் கடந்து ஓடியது குதிரை. இப்போது அச் சாலையின் இரு பக்கமும், கடற்கரை வெளியோ, காட்டுப் பிரதேசமோ இல்லை. இரண்டு பக்கமும் பசுமையான வயல்வெளிகள் தென்பட்டன. தொண்டை முட்டும் கதிர்களைச் சுமந்து அரை ஆள் உயரத்திற்கு வளர்ந்திருந்த பயிர்கள் மரகத வர்ணத் திரையாகக் காற்றின் போக்கில் வளைவதும் நிமிர்வதுமாக இருப்பது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகப்போடப்பட்டிருந்த உயர்ந்த வரப்புக்களின் மூலைகளில் திரிசூலக் கற்கள் சிலவும், திருவாழிக்கற்கள் சிலவுமாக நடப்பட்டிருந்தன. திரிசூலக்கற்கள் நடப்பட்ட நிலங்கள் சிவாலயங்களுக்கு விடுத்த 'தேவதானம்' ஆகும்; திருவாழிக்கற்கள் நடப்பட்ட நிலங்கள் திருமால் விண்ணகரங்களுக்கு விடுத்த 'திருவிடையாட்டம்' ஆகும். இறையிலி நிலங்களாக விடப்பட்ட அவற்றில் விளைந்துள்ள பயிர்கள் காற்றின் தழுவலால் தலைசாய்ந்து நிமிரும் காட்சி இறைவனைத் தொழுது விட்டு எழுவதுபோல் தோற்றமளித்தது!

இப்போது பதினேராவது புள்ளடிக் கல்லைக் கடந்து ஓடியது குதிரை. தானியங்கள் விளையும் நன்செய் நிலங்கள் மறைந்து, காய்கறிச் செடிகளும், கனிவகை மரங்களும், மலரினக் கொடிகளும் பயிர் செய்யப் பெற்ற புன்செய் நிலங்கள் சாலையின் இரு பக்கமும் தோற்றமளித்தன. எங்கு திரும்பினும் ஒரே வர்ணமயம்! வாசனைத் தென்றல்!... வேலி கட்டிய அந் நிலங்களின் வரம்புகளில் ஆங்காங்கே தாமரைக் குறியிட்ட கற்கள் புதைக்கப் பெற்றிருந்தன. அவை புத்த மடாலயங்களுக்கு 'மடப்புறம்' என வழங்கி விடப்பட்ட இறையிலி நிலங்களாகும்.

அப்படியானல், அந்தப் புத்தவிகாரம் சமீபித்து விட்டதா?—

விரிந்து பரந்த அன்பு உள்ளத்தினுல் உலகை யெல்லாம் கவர்ந்து கொண்ட பகவான் புத்தர் எழுந்தருளியிருந்த அந்த விகாரம், விண்ணின் ஒரு பகுதியை மறைத்து நின்றது. வெண்தாமரைப் பூவொன்றைக் கவிழ்த்து வைத்த மாதிரி அதன் கோபுரத் தோற்றம் அமைந்திருந்தது. வெண்ணிறச் சலவைக் கற்களாலான கனத்த பெரிய தூண்களில் கற்சிலா காவியங்கள் பல செதுக்கப் பட்டிருந்தன. விகாரத்தின் உள்ளே விசாலமான விதானங்களிலும் அகன்ற கூடச் சுவர்களிலும் கௌதமரின் அட்ட கதைகள் பலவற்றைக் கண்ணுக்கினிய அற்புத வண்ண ஓவியங்களாகச் சித்திரிக்கப் பெற்றிருந்தன.

ரின் வலது பக்கம ஒரு பெரிய கட்டிடம் இருந்தது. அது தென்பாண்டிய நாட்டின் பிரசித்தி பெற்ற நூல்நிலையமாக விளங்கியது. இடது பக்கம் வரிசை வரிசையாக எளிய முறையில் அமைக்கப்பட்ட சிறுசிறு இல்லங்கள் இருந்தன. அந்தப் புத்த மடாலயத்தில் வாழும் பிக்குகள் தங்கியிருப்பதற்கென அமைந்த இல்லங்கள் அவை. அமைதியும், சாந்தமும் சர்வ பொலிவுடன் நிலவும் அந்த மடத்தைச் சுற்றி நாளுவித மலர்ச் செடி கொடிகள் அழகுற வளர்த்து விடப்பட்டிருந்தன.

ஆகா, என்ன அமைதி! என்ன நிசப்தம்!......

இந்த நிசப்தத்தைக் கலைத்து அந் நூல்நிலையத்தின் எதிரே வந்து நின்றது குதிரை. அதிலிருந்து கீழே குதித்து இறங்கினான் மாறவர்மன். தயக்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

நூல்நிலையத்திலிருந்து ஓர் இளந் துறவி வெளியே வந்தார். அங்கே இளவரசன் நின்றிருப்பதைக் கண்டு முகமலர்ச்சியுடன் அருகில் நெருங்கி வணக்கம் கூறினார்.

''நான் உங்கள் தலைவர் கௌஸாம்பி அவர்களைக் காண வந்திருக்கிறேன்...'' என்று தயக்கத்துடன் சொன்னான் மாறவர்மன்.

''வாருங்கள், இளவரசே! இப்போது நீங்கள் இங்கு வருவீர்கள் என்று எங்கள் தலைவர் சொன்னார். வந்ததும் உடனே உங்களை அழைத்துவரும்படி எனக்குக் கட்டளையிட்டிருந்தார். அவர் நூல்நிலையத்தினுள் இருக்கிறார். வாருங்கள்!'' என்று அன்புக் குரலில் கூறி முன்னே நடந்தார் இளந்துறவி.

மாறவர்மனுக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது. தான் இங்கே வரும் செய்தி கௌஸாம்பிக்கு எப்படித் தெரியும்? காங்கேயனுக்கும், மகாராணிக்கும் தவிர வேறு யாருக்கும் அது தெரியாதே! தான் இங்கு வர முடியும் என்பதை அவர் எப்படி அநுமானித்தார்? எதைக் கொண்டு முன்னதாகவே சொல்லி வைத்தார்?

வியப்பும் குழப்பமும் மேலோங்க மெள்ள நடந்து நூல்நிலையத்தினுள் நுழைந்தான் இளவரசன்.

அது ஒரு மிகப் பெரிய கலைக்கூடம் போல் விளங்கியது. சிந்தையள்ளும் சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் மனோரம்மியமாக அமைந்த ஒவ்வோர் அறையிலும் பழமையும் பெருமையும் வாய்ந்த நூற்சுவடிகள் பரண் பரணாக அடுக்கி வைக்கப் பெற்றிருந்தன. அறுபத்து நான்கு கலைகளுக்குரிய எல்லா நூல்களும் அங்கே இருந்தன. நான்கு வேதங்கள், பிராம்மணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள், சூத்திரங்கள், வியாகரணம், புராணங்கள், தாந்திரிக இலக்கியங்கள் முதலான சம்ஸ்கிருத நூல்கள் ஒரு பக்கம்; அருக சமய தத்துவ நூல்கள் பிறிதொரு பக்கம்; பாலிமொழி இலக்கிய நூல்கள் மற்றொரு பக்கம்; அவற்றில் பௌத்த சமய-இலக்கிய நூல்களுக்கும், தமிழிலக்கிய இலக்கண நூல்களுக்கும் முதலிடம் அளிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நூற்சுவடியின் முகப்பிலும் அந்நூலின் பெயரும் அதை இயற்றிய ஆசிரியரின் பெயரும் தெளிவாக வர்ண ஓலையில் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது. தட்டெழுத்துக்களில் அமைந்த பழந் தமிழ் நூல்கள் தனித்ததோர் இடத்தில் காபந்துடன் வைக்கப்பட்டிருந்தன.

நீண்ட தூரம் சென்றதும் நிலையத்தின் இடக்கோடியில் ஒரு பெரிய அறை தென்பட்டது. முன்னே சென்ற இளந்துறவி அந்த அறையை இளவரசனுக்குக் காட்டி விட்டு அப்பால் சென்றார்.

உடனே உள்ளிருந்து ஒரு நெடிய உருவம் மலர்ந்த முகத்துடன் வெளியே வந்தது. ''வாருங்கள், இளவரசே! வணக்கம்!'' என்று இனிய குரலில் கூறிக்கொண்டே இரு கரங்களையும் நீட்டி அன்புடன் வரவேற்றார் அன்பானந்த கௌஸாம்பி. பதில் வணக்கம் கூறி அவருடன் உள்ளே சென்றான் மாறவர்மன். இருவரும் அந்த விசாலமான அறையில் போய் எதிரெதிரே அமர்ந்தனர்.

ஸுத்த பிடக நூலொன்றை கௌஸாம்பி இந்நேரம் படித்துக் கொண்டிருந்தார் என்பதற்கு அறிகுறியாக அங்கே அந்நூலின் சில சுவடிகள் விரிந்திருந்தன. அவற்றுடன், 'குண்டலகேசி' என்னும் பௌத்த காவியமும், 'நீலகேசி', 'சீவகசிந்தாமணி' ஆகிய சமண காவியங்களும் இருந்தன. இதை யெல்லாம் கவனிப்பது போல மாறவர்மன் வெறுமனே தன் பார்வையை ஓடவிட்டான். ஆனால் அவனுடைய கவனமெல்லாம் கௌஸாம்பியின் முகபாவனைகளை அளப்பதிலேயே லயித்திருந்தது. தான் இங்கு வந்த விஷயத்தை எப்படி அவரிடம் துவங்கிச் சொல்வது என்ற யோசனையும் ஒரு பக்கம் எழுந்தது. 'இங்கு நான் வரும் செய்தியை அவர் முன்னதாகவே அறிந்து கொண்டதைப் போல, எதன் பொருட்டு வந்திருக்கிறேன் என்பதையும் அவர் அறிந்திருப்பாரோ' என்று ஒரு கணம் எண்ணினான்.

இந்தக் குழப்பத்தைத் தவிர்ப்பது போல கௌஸாம்பி மெல்லப் பேச்சைத் துவக்கினார்:

"இன்று காலை இளவரசர் என்னிடம் விடைபெற்றுச் சென்றபோதே நான் எண்ணினேன், அவர் மாலைக்குள் இங்கு என்னைத் தேடி வருவார் என்று!"—புன்முறுவலுடன் சொன்ன கௌஸாம்பி மாறவர்மனின் முகத்தையே கூர்ந்து பார்த்தார்.

"அதெப்படி நான் இங்கு வருவேன் என்று அத்தனை உறுதியாக எதிர்பார்த்தீர்கள்?" என்று கேட்டான் இளவரசன் இளநகையுடன்.

"இறந்த காலத்தின் எண்ணங்கள் நிகழ்காலத்தின் பேச்சாகி, எதிர்காலத்தில் செயல் வடிவம் பெறுகின்றன. இது ஒரு கணித முறையின் பாற்பட்டது. இதில் தேர்ச்சியுள்ளவர்கள், ஒருவனது எண்ணங்களை ஊகித்து வரிசைப் படுத்தினால் அவனது செயல்களையும் அறுதியிட்டு வரிசையாகக் கூற முடியும். எனக்கு இதில் ஓரளவு பயிற்சி உண்டு!" என்று கூறிச் சிரித்தார் அடிகள்.

"இருக்கலாம். ஆனால், ஒருவனது எண்ணங்களை ஊகிப்பது அத்தனை எளிதல்லவே?"

"பயில்வது என்பதே, எளிதல்லாத ஒன்றைப் பயில்வது என்றுதான் பொருள். அவ்வந்தச் சூழ்நிலைகளைக் கொண்டு அவ்வப்போதைய ஒருவ



னது எண்ணங்களை ஊகிப்பது சற்றுக் கடினம் என்றாலும் அது சாத்திய மாகக் கூடியதே!"

" தங்களைப் பொறுத்தவரை இந்தப் பயிற்சியில் நன்கு தேறியிருக்கிறீர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன்!" என்று கூறிக் கலகலவெனச் சிரித்தான் மாறவர்மன். அந்தச் சிரிப்பு அவனுடைய தோல்வியை மறைக்க முயன்றது. மீண்டும் அவனே, "அப்படியானால் இப்போது நான் இங்கே ஏன் வந்திருக்கிறேன் என்பதையும் அடிகள் அறிந்திருக்கக் கூடும் ......?" என்று இழுத்தான்.

அன்பானந்தர் லேசாகச் சிரித்து விட்டுச் சொன்னார்: "முதலில் அதையறிந்து, பிறகு அதன் பொருட்டு நீங்கள் இங்கே வரலாம் என்பதை அநுமானித்தேன்!"

"காலையில் நான் அந்த விஷயம் பற்றிக் கேட்ட போது நீங்கள் சொல்லி விட்டிருந்தால் இப்போது இங்கே வந்திருக்க மாட்டேன்."

" உண்மைதான்; எதையும் மறைப்பது என் போன்ற துறவிகளுக்கு நன்றல்ல. ஆனால், சூழ்நிலையை உத்தேசித்து தாற்காலிகமாக அவ்விஷயத்தை மறைத்தேன். அதனால் இளவரசருக்கு என்மீது சற்று வருத்தமாகவும் இருக்கலாம்."

" அப்படியெல்லாம் இல்லை, அடிகளே! ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான் அதைச் சொல்லாமல் மறைக்கிறீர்கள் என்பதை உடனே நான் புரிந்து கொண்டேன். அப்படி மறைப்பது எனது நன்மையைப்



பொறுத்தே ருக்கும் என்றும் எண்ணிக் கொண் டன்."

"இளவரசர் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் நல்லபிப்பிராயத்திற்கும் எனது நன்றி உரித்தாகும்" என்று சொன்ன அன்பானந்தர், சற்று நேரம் எதைப் பற்றியோ ஆழ்ந்து யோசித்துவிட்டு மிகத் தணிந்த குரலில், "ஆயினும் இப்பொழுதுகூட அந்த விஷயத்தை நான் உங்களிடம் கூற விரும்பவில்லை!" என்றார்.

இதைக் கேட்டுப் பலத்த ஏமாற்றத்துக்கு உள்ளானான் மாறவர்மன். அவன் ஓர் இளவரசன்; எதிர்காலப் பாண்டி நாட்டின் மன்னனாகப் போகிறவன்; அப்படிப்பட்ட ஒருவனிடம், அவனுடைய நாட்டில் இருந்துகொண்டு, அவனுடைய பாதுகாப்பிலே சமயத்தொண்டு செய்து வரும் ஒரு துறவி, அவன் சம்பந்தப்பட்ட விஷயத்தை நேரிடையாகவே மறைக்க முயல்வதை அவனால் பொறுக்க முடியவில்லை.

தன்னுள் தலைதூக்கிய சினத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு "அந்த விஷயத்தைக் கூற விரும்பாவிட்டால் நான் வற்புறுத்தப் போவதில்லை. ஆனால், அது ஓர் இளவரசனைச் சார்ந்த விஷயம் என்பதை அடிகள் மறந்திருக்க மாட்டார்!" என்றான் நளினமான தொனியில். அவன் இத்தனை நாசூக்காகப் பேசியதற்கு ஓர் அடிப்படைக் காரணம் இருந்தது. அது அவனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட குரல் படைத்த அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களை எப்படியேனும் அவரிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் அடக்க முடியாத ஆவல்தான்!

இளவரசனின் பேச்சைக் கேட்டு விழிப்படைந்தவர்போல் நிமிர்ந்து உட்கார்ந்தார் கௌஸாம்பி. ஆனால், அவருடைய முகத்தில் எப்போதும் போல் அந்தக் குளுமையான புன்முறுவல் தவழ்ந்து கொண்டுதான் இருந்தது. "இளவரசரின் எதிர்கால நன்மையில், நாட்டங் கொள்வது எந்த ஒரு பிரஜையினுடையவும் கடமையல்லவா? அதற்காகவேனும் சில விஷயங்களை மறைப்பது தவறல்ல என்றே கருதுகிறேன்!" என்றார் மிகவும் சாந்தமாக.

தன்னையறியாமல் ஏற்பட்டிருக்கும் தனது உள்மனத்தின் சலனத்தை இந்தப் பௌத்தத் துறவி அறிந்து கொண்டு விட்டாரோ என்று எண்ணிய மாத்திரத்தில் அவனுக்கு உள்ளூற ஒருவித நாணம் ஏற்பட்டது. அந்த இனிய குரல் படைத்த பெண்ணின்மீது அவன் ஏதோ ஒருவகையான நாட்டம் கொண்டு விட்டான் என்று சந்தேகித்து, அது வலுவடையக் கூடாது என்பதற்காக, அவர் இப்படிப் பேசுகிறாரோ? உலகபந்தங்களை வெறுத்து, அதன் மூலவேட்கையான பெண்ணாசையை முற்றும் துறந்து, முழுப் பிரமசரிய விரதத்தை மேற்கொண்டிருக்கும் அவர், வாலிபனான இளவரசன் ஒரு வாலிபப் பெண்ணைப் பற்றி அறிய முயல்வது கூடாது —அதற்குத் தான் உதவி செய்வதும் கூடாது — என்று கருதுகிறாரோ? எனவேதான் அந்தப் பெண்ணைப் பற்றி எதுவும் கூற மறுக்கிறாரோ?... இவ்வாறெல்லாம் எண்ணிய மாறவர்மனுக்கு, இனி என்ன பேசுவதென்றே தெரியவில்லை. எனினும், அவன் இன்னும் சற்று ஊடாடிப் பார்க்கலாமே என்ற முடிவுக்கு வந்தான்:

"அடிகளே! நான் தங்களிடம் கூற விரும்புவது இதுதான்: அயல் தேசத்தைச் சேர்ந்த ஓர் ஆணோ பெண்ணோ எக்காரணத்தைக்! கொண்டும் நமது நாட்டில் மர்மமாக நடமாடுவது அத்தனை நல்லதல்ல. நேற்றிரவு அந்தப் பெண் என்னிடம் உங்கள் மடம் இருக்கும் இடத்திற்கு வழி கேட்டாள். இரவு நேரத்தில் ஒரு பெண் இங்கு வரவேண்டிய அவசியம் என்னவென்று சிந்தித்தேன். உங்களின் மேற்பார்வையில் இயங்கும் இந்த மடத்தின் தூய்மையைப் பற்றி நான் நன்கு அறிவேன்; ஆகவே, என் மனத்தைத் தெளிவாக்கிக் கொண்டு அந்தப் பெண்ணுக்கு வழி காட்டினேன். பிறகு அவளைத் தேடி அந்த வணிகன் வந்தான். அவனுடைய பேச்சும் பார்வையும் பரபரப்பும் எனக்கு லேசான சந்தேகத்தை எழுப்பின. 'என்னதான் நடக்கிறது பார்ப்போம்' என்று அவனை வேறு திசையில் திருப்பி விட்டேன். ஆனால், என்னுடைய துரதிர்ஷ்டம் அந்தப் பள்ளத்தில் விழவேண்டியவனானேன். தக்க தருணத்தில் வந்து என்னைக் காப்பாற்றிய தாங்கள், நான் அந்தப்

பள்ளத்தில் விழுந்தது அதிர்ஷ்டம் என்றீர்கள்; அதன் காரணத்தைக் கூறவில்லை! நீங்கள் அங்கு வர ஒரு பெண்தான் காரணம் என்றீர்கள்; அந்தப் பெண் யாரென்று கூறவில்லை! இந்நிலைமையில் நான் என்ன நினைக்க முடியும்? இத்தனை நடந்த பின்னும் அதுபற்றி அறியாமல் இருக்க முடியுமா? அப்படி இருப்பது என் பான்ற ஓர் இளவரசனுக்கு அழகா?'' என்று மிகுந்த படபடப்புடன் கேட்டு நிறுத்தினான் மாறவர்மன்.

இதையெல்லாம் அமைதியோடு கேட்டுக் கொண்டிருந்த அன்பானந்த கௌஸாம்பி, கண்களை லேசாகமூடிய வாறு நிதானமாகச் சொன்னார்: ''சே! இனியும் நான் அந்த ...ந்தை உங்களிடம் மறைக்க விரும்பவில்லை. நேற்றிரவு இரண்டாம் ஜாம நேரத்தில் நான் சாதுர்மாசத்தை முடித்துக்கொண்டு வெளியே போய் என் தோட்டத்தில் ...லாவிக் கொண்டிருந்தேன். அச்சமயம் ஓர் இளம் பெண் மடத்திற்குள் ஓடிவந்தாள். இங்கே இரவு நேரத்தில் எந்தப் பெண்ணையும் உள்ளே அநுமதிப்பதில்லை; அப்படி யாரும் இதுவரை வந்ததுமில்லை. எனவே, நான் அவளைப் பார்த்துத் துணுக்குற்றேன்; சற்றுச் சினமும் கொண்டேன். ஆனால், அவளோ என்னிடம் பயந்தபடி ஓடிவந்து, தான் யார் என்பதை முதலில் சொல்லி விட்டு, 'கொற்கைப் பெருவழியில் பாண்டிய இளவரசருக்கு ஓர் ஆபத்து நேரவிருக்கிறது; ...டனே போய்க் காப்பாற்றுங்கள்' என்று வேண்டினாள். அவளுக்கும் ... விஷயத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பின் ஏன் அவள் இப்படிச் சொல்கிறாள் என்று எண்ணினேன். அதற்குள் அவளே மளமளவெனக் காரணங்களை விளக்கிக் கூறினாள். எனக்கு அவள் பேச்சில் நம்பிக்கை ஏற்பட்டது. உடனே கொற்கைப் பெருவழியை நோக்கி நடந்தேன். இரவெல்லாம் எங்கெங்கோ சுற்றியலைந்தும் உங்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒருகால் அவள் சொன்ன மாதிரி உங்களுக்கு ஏதேனும் அபாயம் ஏற்பட்டு விட்டிருக்குமோ என்று பெரிதும் பயந்து விட்டேன். குழப்பத்துடன் மடத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் அந்தப் பள்ளத்திலிருந்து உங்கள் குதிரை கனைக்கும் சப்தம் ...டது. உடனே அங்கு விரைந்து ...தேன். உங்களைக் கண்டேன். ...வனின் கருணையை என்னென்பது? அதை நினைக்க நினைக்க என் உடல் புல்லரிக்கிறது!''

கௌஸாம்பியின் இந்தப் பேச்சை எல்லையற்ற வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த மாறவர்மன் மிகவும் துடிப்பான குரலில், ''என்னுடைய கவனப் பிசகால்தான் நான் அந்தப் பள்ளத்தில் விழும்படியாயிற்று. அதையா எனக்கு நேர்ந்த விபத்து என்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''இல்லை; அப்படி விழுந்தது உங்கள் அதிர்ஷ்டம் என்கிறேன்! இல்லையெனில், இப்போது நீங்கள் இங்கே என்னுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க முடிந்திராது!''

''அடிகள் ...ப்படிச் சொல்லக் காரணம்?'

''அந்தப் பெண் சொன்னது உண்மை; சோனகன்போல் வந்தவன் உண்மையில் ஒரு முத்துவணிகன் அல்லன்; உங்களை உயிராபத்திற்கு உள்ளாக்க வந்த ஒரு சதிகாரன் அவன்!''

''நான் அப்படி நினைக்கவில்லை. ஏனென்றால், நான் அவன் எதிரில் நின்று பேசினேன். சதி எண்ணத்தோடு வந்தவனாயிருந்தால் அப்போதே அவனுடைய திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கலாமே?''

''நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால், அவன் அப்படிச் செய்யாததற்குப் பிறகுதான் காரணம் புரிந்தது. உங்களை அவன் அந்த இடத்தில் சந்திக்க வரவில்லை. வேறு இடத்தில் சந்தித்துத் தன் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள எண்ணியிருந்தான். எதிர்பாராமல் நீங்கள் அவன் எதிரே அங்கு எதிர்ப்பட்டு விட்டீர்கள். அப்போது விழிப்புடன் நீங்கள் அவன் எதிரே நின்றிருக்க வேண்டும். அதனால் உங்களை நேரிடையாக எதிர்க்கப் பயந்து, நீங்கள் திரும்பிச் செல்லும்போது பின்னால் வந்து தாக்க எண்ணியிருக்கிறான். அச்சமயம், காங்கேயனுடைய குதிரை தொலைவில் வருவதைக் கவனிக்கவே, அவன் அந்தக் கள்ளிக் காட்டில் போய் ஒளிந்திருக்கிறான். அதற்குள் நல்ல வேளையாக நீங்கள் பள்ளத்தில் விழுந்து விட்

டீர்கள். அதிர்ஷ்டவசமாக அந்த அவன் கவனிக்க வில்லை !...''

''இவ்வளவும் அந்தப் பெண் சொல்லித்தானே நீங்கள் அவனைப் பற்றி இப்படியெல்லாம் அநுமானித்துக் கூறுகிறீர்கள் ?''

''இல்லை; அவள் சொன்னதுடன், நானும் அதை நிச்சயப்படுத்திக் கொள்ள, வேறு ஆதாரங்கள் இருக்கின்றன. நீங்களும் காங்கேயனும் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு போனபின், நான் ஏதோ ஒரு முடிவுடன் அந்தக் கள்ளிக் காட்டினுள் நுழைந்து, கால் போன திக்கில் போனேன். அப்போது ஓரிடத்தில் அந்தச் சதிகாரனைக் காண முடிந்தது. அவன் இன்னான் என்பதையும் தெரிந்து கொள்ள முடிந்தது !''

''யார் அவன் அடிகளே? அவன் இப்போது எங்கிருக்கிறான் ?'' என்று தன்னை மீறிய நடுக்கத்துடன் கேட்டான் மாறவர்மன்.

''அவன் இப்போது தென்பாண்டி நாட்டில் இல்லையென்பது உறுதி. ஆனால், அவன் யார் என்பதைச் சொல்ல என்னால் இயலாது !'' என்று மிகவும் உறுதியுடன் சொன்னார் கௌஸாம்பி.

மாறவர்மனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவனாய் ''அந்தப் பெண் யார் என்றாவது சொல்ல முடியுமா ?'' என்று கேட்டான்.

''அதைச் சொன்னால், அவனும் யார் என்று தெரிந்துவிடும் !''

''இதை ஏன் நீங்கள் என்னிடம் மறைக்கிறீர்கள் ?''

''உங்களிடம் மட்டுமல்ல; நானே அதை எனக்கு மறைத்துக் கொள்கிறேன் !''

''காரணம் வேண்டுமல்லவா ?''

''அந்த அபலைப் பெண்ணுக்கு நான் அப்படி ஓர் அடைக்கலம் கொடுத்து விட்டேன். அடைக்கலப் பொருளைக் காட்டிக் கொடுப்பது அற்பர்களின் செயல் !''

''அவள் யார் என்றாவது சொல்லக் கூடாதா ?''

''மன்னிக்க வேண்டும்.''

''அவள் இப்போது இருக்குமிடத்தையாவது......''

''மிகவும் மன்னிக்க வேண்டும்.''

''இப்படி மறைப்பது இராஜத் துரோகமாகுமே ?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் இளவரசன். அந்தச் சிரிப்பின் அடியிலே அடக்க முடியாத சினம் குமுறியது.

''இது இராஜத்துரோகமென்பதை நான் நன்றாக அறிவேன், இளவரசே ! ஆனால், என்னிடம் வந்து தஞ்சமடைந்த ஒரு பரிதாப நிலைக்குரிய சின்னஞ் சிறு பெண்ணைக் காட்டிக் கொடுப்பதைவிட, அதனால் கிடைக்கும் எந்தவித தண்டனையையும் ஏற்கச் சித்தமாவேன் !'' என்று கண்களில் ஒளி மின்ன, குரலில் உறுதி தெறிக்கக் கூறி நிறுத்தினார் அன்பானந்த கௌஸாம்பி.

வியப்பால் மாரடைத்துப் போன மாறவர்மன் சட்டென ஏதோ நினைத்துக் கொண்டவனாய், ''ஒரு சந்தேகம்; என்னைக் காப்பாற்ற வேண்டி உங்களிடம் வந்து முறையிட்ட அவள், என்னிடமே—என்னைப் பார்த்த போதே — சொல்லி எச்சரித்திருக்கலாமே ?'' என்று கேட்டான்.

''அவளுக்கு நீங்கள்தான் இளவரசர் என்பது தெரியாது. ஆனால், உங்களுக்கு அன்றிரவு ஓர் ஆபத்து நேரப் போகிறது என்பதை மட்டும் அறிந்து கொண்ட அவள், நேரே என்னிடம் ஓடிவந்திருக்கிறாள் !'' என்று விளக்குதுறவி.

அப்படித் தன்மீது பரிவு காட்டிய அந்தப் பெண் யார் என்று தன்னை மறந்த சிந்தனையில் ஆழ்ந்தான் மாறவர்மன்.

இச்சமயம், இளந்துறவி உள்ளே வந்து, ''காங்கேயன் இளவரசருக்காக வெளியே காத்திருக்கிறார் !'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

உடனே மாறவர்மன் எழுந்து, ''அடிகளுக்கு நான் மிகவும் சிரமம் கொடுத்து விட்டேன். மன்னிக்க வேண்டும். மதுரைக்குச் சென்று திரும்பியதும் தங்களை வந்து சந்திக்கிறேன், வணக்கம் !'' என்று கூறி விட்டு அவசரமாக அங்கிருந்து வெளியேறினான்.

அவன் போன ஒரு சில விநாடிகளுக்குப் பின் —

அந்த அறையின் ஒரு மூலையில் அடுக்கப்பட்டிருந்த ஓலைச் சுவடிக் கட்டுக்களின் பின்னாலிருந்து ஓர் அற்புத எழில்படைத்த இளம் பெண்ணின் தலை மட்டும் மேலே எழும்பியது !

(தொடரும்)

# ஆலவாய் அழகன்

## அத்தியாயம் ஐந்து

## ஜலதேவதைகளின் ஜாலம்!

"வாங்குசிறை யன்னந் துயிலொழிய
வண்டெழுப்பும் பூங்கமல வாவி......" — மெய்க்கீர்த்தி

மதுரையமா நகருக்குக் கிழக்கே யுள்ள கெட்டூர், நடுச் சாம இரவின் பேரமைதியில் துயின்று கொண்டிருந்தது. அது ஒரு சிற்றூர்தான். ஆனால் அதன் அமைப்பும், அழகிய புதிய கட்டிடங்களும் அதை ஒரு சிறிய நகரம்போல் திகழச் செய்தன. சில ஆண்டுகளுக்கு முன்னால், மூன்றாம் குலோத்துங்க சோழன், வீர பாண்டியனுடன் தொடுத்த பெரும் போரினால் அது பெரிதும் பாழ்பட்டு அழிந்து போயிற்று. அவ்வூரிலிருந்த பழைமையான கட்டிடங்களும் கலையம்சம் நிறைந்த மாட கூட மண்டபங்களும் இடிந்தும் தீக்கிரையாகியும் ஒழிந்தன. எனவே, அந்தப் போருக்குப் பின் அவ்வூரைப் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியதாயிற்று. ஆயினும் ஆங்காங்கே பழைமையின் சின்னங்கள் இன்னும் தலைகாட்டிக் கொண்டுதான் இருந்தன.

நடுச்சாமம் நகர்ந்த சற்று நேரத்திற்கெல்லாம், கீழ்த்திசை வான்விளிம்பில் எட்டாம் நாளின் தேய்பிறைச் சந்திரன் மொக்கையும் மூளியுமாக வெளுத்துச் சிறுத்துச் சோகைத்தனமாக மேலெழும்பியது. அதன் முதுமைக் கோல ஒளிப் புலம்பலைச் சட்டை செய்யாத இருள், இன்னும் சரம் கட்டித் தொங்கி விரிந்துதான் இருந்தது.

அந்த ஊரின் தென்கோடியிலிருந்த குளத்தங்கரையில் இரண்டு குதிரைகள் வந்து நின்றன. நீண்ட நெடுந் தூரப் பிரயாணக் களைப்பால் அவை வெண்நுரைகளைத் தள்ளிப் பெருத்த மூச்சொலிகளைக் கிளப்பின. அக்குதிரைகளின் மேலேறிய முதுகை விட்டுக் கீழே குதித்து இறங்கினார்கள் இளவரசன் சுந்தரபாண்டியனும், முனையெதிர்மோகர் படைத் துணைத் தலைவனான காங்கேயனும்!

கொற்கை நகரிலிருந்து, கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து குதிரைப் பிரயாணம் செய்து வந்ததால் அவர்கள் மிக மிகக் களைத்துச் சோர்ந்து விட்டார்கள். பசிக் களைப்பை விட உறக்கக் கிறக்கமே அவர்களைப் பெரிதும் சோர்வுறச் செய்து விட்டது. சற்று நேரமாவது இறங்கிக் களைப்பாறினால்தான் மேற்கொண்டு பயணத்தைத் தொடர முடியும் போலாகி விட்டது. பொழுது புலர்ந்ததும் இங்கிருந்து புறப்பட்டால், நாளைப் பிற்பகலுக்குள் மதுரை அரண்மனையை அவர்கள் அடைந்து

விடலாம். அந்த முடிவுடன்தான் ஏப் போது இறங்கினர்கள்.

அது ஒரு பாழடைந்த குளம். படித் துறைகள் பழுது பட்டுக் கிடந்தன. குளத்து நீரில் கரும்பாசி படர்ந்து மூடிக் கிடந்தது. அதையும் மேவிக் கொண்டு அல்லிக் கொடிகளும் அர விந்தத் தண்டுகளும் தமது பச்சை இலைத் தட்டுக்களை நீரில் விரித்து மிதக்கவிட்டிருந்தன. மலர்ந்த குமுத மலர்களும், மலராத் தாமரை மொட் டுக்களும் நீர்ப் பரப்புக்கு மேலே நிமிர்ந்தும் முடங்கியும் நின்றுகொண் டிருந்தன. குளத்தைச் சுற்றி வளர்ந் திருந்த பலவித மரங்களின் கிளைகள் தாழத் தவழ்ந்து காற்றின் அசைவால் நீரை அலம்பிக் கொண்டிருந்தன.

கரையில் நின்ற காங்கேயனும் மாற வர்மனும் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தனர். தேய்பிறை நிலவின் சன்னமான ஒளியில் சற்றுத் தொலைவி லிருந்த ஊர் ஏதோ ஒரு கனவுச் சித் திரம்போல் தோற்றமளித்தது.

"காங்கேயா! குதிரைகளை அதோ அந்த மாமர வேரில் கட்டிப் போடு. நான் சற்று நேரம் இங்கே கண் ணயர்ந்து எழுகிறேன்!" என்று குளக் கரையின்மேல் உட்கார்ந்தான் மாற வர்மன்.

பனியும் குளிரும் மிகுந்திருந்தன. நேற்றோ அதற்கு முன்தினமோ மழை பெய்திருந்ததால் தரை இன்னும் காயாமல் ஈரமாகவே இருந்தது. குளக்கரையின் பல இடங்களில் மண் ணரிப்பு ஏற்பட்டு, சிறு சிறு கால்வாய் கள் பறிந்திருந்தன. அந்தக் கால்வாய் களின் ஓரம் குத்துக் குத்தாக முட் செடிகளும் நெரிஞ்சிமுள் கொடிகளும் கொழுகொழுவென வளர்ந்து படர்ந் திருந்தன.

இம்மாதிரியான ஓர் இடத்தில் இள வரசன் படுத்துக் கண்ணயரப் போவ தாகச் சொன்னது காங்கேயனுக்கு என்னவோ போலிருந்தது.

"இளவரசே! இங்கே நாம் படுத் துக் களைப்பாறுவதைவிட ஊரினுள் சென்று யாரேனும் ஓர் அதிகாரியின் மாளிகையில் தங்குவது நலமென்று நினைக்கிறேன். சற்று நிம்மதியாகத் தூங்கியெழவும் அது சௌகரியமாக இருக்கும்!" என்றான் காங்கேயன்.

மாறவர்மன் லேசாகச் சிரித்து விட்டுச் சொன்னான்: "காங்கேயா! எனக்கு அந்த யோசனை தோன்றாமல் இங்கே வந்திருப்பதாக எண்ணாதே! இந்நேரத்தில் நாம் ஊருக்குள் சென்று பொது விடுதிகளில் தங்கலாம் என்றா லும், அதனால் பல பேருக்குப் பலவித மான சங்கடங்கள் ஏற்படும். இள வரசன் பொது விடுதியில் தங்கப் போனால், அங்கே ஏற்கெனவே தங்கி யுள்ள யாத்ரிகர்கள் வெளியேறியாக வேண்டும். இந்த நடுச்சாம வேளை யில் அவர்களுக்கு அத்தகைய தொல்லை தருவது நல்லதல்ல. "நம் இரண்டு பேருக்காகப் பல பேர் உறக்கம் கலைந்து சிரமப்பட வைக்கக் கூடாது. இதை விடுத்து யாராவது ஓர் அதிகாரியின் வீட்டில் நாம் தங்கப் போனால் அதனாலும் பல விளை நிகழ்ச்சிகள் நிகழலாம். 'என் வீட் டில் இளவரசன் ஓர் இரவு வந்து தங் கிப் போனான்' என்று அந்த அதிகாரி ஊரெல்லாம் பெருமையுடன் பிரசா ரம் செய்து கொள்வார். அத்துடன் நில்லாமல், அந்த அதிகாரிகு நான் மிகவும் வேண்டியவன் போலவும், அத னால்தான் அவர் வீட்டில் வந்து தங்கியதாகவும் சொல்லிக் கொண்டு, தமக்கு மேலுள்ள பெரிய அதிகாரி களிடம் சலுகைகள் பெறவோ, தமக் குக் கீழுள்ள சிறிய உத்தியோகஸ்தர் களை மிரட்டிப் பயமுறுத்தவோ முயல் வார். அல்லது பிற்காலத்தில் என்றா வது ஒரு நாள் அந்த நபர் என்னிடம் வந்து இந்தச் சம்பவத்தை நினை வூட்டிச் சலுகைகள் கோரலாம். கொஞ்ச நேரம் நாம் இளைப்பாறுவ தற்காக இம்மாதிரியான அற்ப விளை வுகள் ஏற்படும்படிச் செய்து கொள் வது அறிவுடைமையாகாது. எனவே தான், ஜன சஞ்சாரமற்ற இந்த எல் லைப்புறக் குளத்தங்கரையில் வந்து தங்கினேன். நீ வேண்டுமானால் ஊருக் குள் சென்று எங்காவது தங்கி உறங்கி எழுந்து வா. அதுவரை நான் இங் கேயே இருக்கிறேன். எனக்கு வேண் டியது கொஞ்சம் ஓய்வுதான்; உறக்க மல்ல!"

'ஒரு மிகச் சிறிய விஷயத்தில் இள வரசனின் மூளை இந்த அளவுக்குப் போய் வேலை செய்கிறதே; இதைவிட இன்னும் பெரிய விஷயமாய் இருந் தால்?......' என்று எண்ணி வியப் படைந்து போனான் காங்கேயன். கிரீட ஜாதியில் ஒருவன் பிறக்கும் போதே அவனுடைய அரசியல் அறிவு முழுமையுடன் இயங்கத் துவங்கி விடும் போலும் என்று எண்ணிக் கொண்டான் அவன். ஆயினும் இன்

தும் இரண்டு ஜாம நேரத்தை இங்கே இருந்து எப்படிக் கழிப்பது என்ற கவலை அவனுள் பெரிதாகி விட்டது. தூக்கத்தையாவது போக்கி விடலாம்; ஆனால், நீண்ட நேரமாகத் தண்ணீர் தாகம் எடுத்துத் தொண்டை வறண்டு விட்டிருக்கிறதே! இந்தப் பாழடைந்த குளத்தில் பருகுவதற்கேற்ற தண்ணீரும் இல்லை. அவன் இடுப்பில் தொங்கிய தோல் பையில் ஒரு சொட்டு நீரும் இல்லை.

"இளவரசே! உங்கள் யோசனைப்படி நாம் இங்கேயே தங்கி இளைப்பாறலாம். ஆனால், எனக்குத் தாள முடியாத தண்ணீர் வேட்கையாயிருக்கிறது. எங்காவது போய்க் கொஞ்சம் நீர் எடுத்து வர அனுமதி தருகிறீர்களா?" என்று தயங்கியபடி கேட்டான் காங்கேயன்.

"தாராளமாகச் சென்று வா! எனக்கும் தாகமாகத்தான் இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே கால்களை நீட்டி ஒருக்களித்துத் தரையில் சாய்ந்தான் மாறவர்மன்.

காங்கேயன் அங்கிருந்து வேகமாக ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

**ம**ரத்தடியில் கட்டிக் கிடந்த குதிரைகள் இரண்டும் கால்களை மடக்கிப் படுத்துத் தரையில் தலையை நீட்டி வைத்துக்கொண்டு கண்களை மூடுவதும் திறப்பதுமாக இருந்தன.

இடக்கரத்தை மடித்து ஊன்றித் தலையைத் தாங்கிப் பிடித்தவண்ணம் படுத்திருந்த மாறவர்மன், குளக்கரையில் வளர்ந்து நின்ற மரங்களுக்கு மேலே நீலவானச் சரிவில் மெள்ள மெள்ள ஏறிக் கொண்டிருந்த நிலவையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் மங்கிய ஒளிக் கற்றைகள் மரக் கிளைகளின் இடுக்குகளில் புகுந்து, குளத்து நீரின் பாசிப் பரப்பில் மாற்றுக் குறைந்த வெள்ளி நாணயங்களை வாரி இறைத்தாற்போல் தெறித்துக் கிடந்தன.

அமைதியும் தனிமையும் மனித சிந்தனைகளின் கருவூலங்களையே அசைத்துப் பிடுங்கி மேலே கொண்டு வரும் சக்தி படைத்தவை அல்லவா? அவற்றுடன் இரவும் சேர்ந்து கொண்டால்...?

முதலில் தெளிவில்லாமல் நூலிழை போல் பிரிந்த அவனது சிந்தனைகள் விநாடிக்கு விநாடி நீண்டு நெளிந்து சல்லிவேர்களாகவும் 'ஆணிவேர்'களாகவும் கிளைத்துப் பரந்து ஏதேதோ சம்பவங்களின் வண்டல்களையெல்லாம் தொட்டுத் துருவிக் குடைந்து துளைத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தன:

'சடையவர்மர் குலசேகர பாண்டியர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவரைப் பார்க்கச் செல்லும் நான், அவருடைய தம்பியல்ல என்று என் அன்னை சொல்லி விட்டார். இருபத்தெட்டு ஆண்டுகளாக இவ்வளவு பெரிய இரகசியத்தை அவர் ஏன் என்னிடம் மறைத்து வைத்தார்? இத்தனை காலம் அன்பும் மதிப்பும் பரிவும் காட்டி வந்த சடையவர்மர், இப்போது ஏன் திடீரென என் அன்னை மீது வெறுப்புக் காட்டுகிறார்? உண்மையில் அவர் என் அன்னைக்குத் தனயன் இல்லையா? அவ்வாறானால் எனது தந்தைக்கு அவர் என்ன முறை? என் தந்தை ஏன் அடிக்கடி சோழநாட்டுக்குப் போனார்? அந்த இரண்டு குழந்தைகளும் எங்கள் அரண்மனைக்கு எப்படி வந்தன? அவற்றின் உண்மையான பெற்றோர் யார்? நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருந்த அந்தச் சிறுமி எப்படிக் காணாமற் போனாள்? யார் அவளைத் தூக்கிச் சென்றிருப்பர்? அவள் கதி என்னவாகியிருக்கும்? அந்தப் பெண் இப்போது உயிரோடு இருப்பாளா? அல்லது...?'—

அவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். குளத்தின் உச்சியில், தூங்கி வழியும் நிலா தொங்கிக் கொண்டிருந்தது. அதன் சோம்பலான ஒளிப்புகை, பாசி நீரில் பற்றற்றுப் படர்ந்திருந்தது.

அவன் எழுந்து உட்கார்ந்தானே தவிர, அவனுடைய சிந்தனை வேர்கள் அறுபடாமல் மேலும் மேலும் துழாவிக் கொண்டே போயின:

'நான்கு நாட்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவம்? சோனக வணிகன் போல் வேடமிட்டு வந்த அவன் யார்? அவன் துரத்தி வந்த பெண் யாராய் இருப்பாள்? அந்த 'வணிகன்' என்னிடம் விரோதம் கொள்ளக் காரணம் என்ன? இத்தனை காலம் சுதந்திரமாகத் திரிந்து வந்த எனக்கு இம்மாதிரி அனுபவங்கள் இதுவரை ஏற்பட்டதில்லையே!...... சடையவர்மர் நோயுற்றிருப்பதற்கும், நான் மதுரை செல்வதற்கும், இந்தச் சம்பவங்களுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்

குமோ?...அந்த இரண்டு பேரின் உண்மைகளை வெளியிட புத்த பிட்சு மறுப்பதன் காரணம் என்ன? நிஜமாகவே அவர் என்னுடைய நன்மையில் நாட்டம் கொண்டவரா? அல்லது அவரும் அச்சதிகாரர்களுடன் சேர்ந்த ஒரு சதிகாரரா? இது அரசியல் சதியா? மதச் சார்புள்ள சதியா? அல்லது சொந்த விரோத குரோதங்களால் முகிழ்த்து உருவான சதியா? அயல் நாட்டாரின் கைப்பாவையாக கௌஸாம்பி ஆக மாட்டார் என்பது என்ன நிச்சயம்? விரோதிகள் முதலில் சமயத் தலைவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு தான் அவர்கள் மூலம் தங்கள் அரசியல் சூழ்ச்சிகளை இயக்குவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேனே? அதன்படி தான் இப்





போது நடக்க ஆரம்பித்திருக்கிறதோ? கௌஸாம்பி நம்பக் கூடியவரா? அல்லது கண்ணில் விளக்கெண்ணெயை விட்டுக்கொண்டு கண்காணிக்கப்பட வேண்டியவரா?...'—

உட்கார்ந்திருந்தவன் சட்டென எழுந்து நின்றான். குளத்தின் மறு கோடியில் ஏதோ சிறு சலசலப்புச் சத்தம் கேட்டது. அதை இளவரசன் முதலில் கவனிக்கவில்லை. அவன் திடீரென எழுந்து நின்றதற்குக் காரணம் வேறொன்று இருந்தது:

'குழந்தாய்! நேற்றிரவு நிகழ்ந்த சம்பவங்களைக் கேட்டதிலிருந்து எனக்கென்னமோ உள்ளூற ஒருவிதக் குழப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது. உன் தமையன் நோய்ப் படுக்கையில் கிடக்கிறான்; நீ அவனைப் பார்க்க மதுரைக்குப் புறப்படுகிறாய்—இவற்றுடன், நேற்றிரவு யாரோ ஒரு வணிகன் உன்னை ஆபத்திற்குள்ளாக்க முயன்றான் என்னும் செய்தியை இணைத்துப் பார்க்கும்போது, அதில் ஏதோ ஒரு மர்மத் தொடர் தொக்கி நிற்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. மேலும், நீ அசந்தர்ப்பமாக அந்தப் பள்ளத்தில் விழுந்து மேலே வர முடியாமல் உயிர்ப் போராட்டமிட்ட சம்பவம், ஓர் அப சகுனமாகவே என் மனத்தை உறுத்துகிறது. எனவே, இன்று முதல் நீ எவ்விஷயத்திலும் மிகமிக விழிப்போடு இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறேன். எந்த ஒரு விநாடியும், எந்த ஒரு கடுகளவு விஷயத்திலும் மிகுந்த கவனமாக இரு. இதுவே நான் உனக்குச் சொல்லும் இறுதியான புத்திமதி!'—

வாழ்க்கையின் மேடு பள்ளங்களை உய்த்துணர்ந்து[1] உலக அநுபவங்களில் முக்குளித்து எழுந்து முதிர்ந்த வயதினரான மகாராணி திரைலோக்கியமுழுதுடையாள், தம் மைந்தன் மதுரைக்குப் புறப்படும் தறுவாயில் சொன்ன சொற்கள் இவை. அந்தச் சொற்களை இப்போது நினைத்துக் கொண்டதால்தான், தனியே படுத்திருந்த மாறவர்மன் திடுக்கிட்டு எழுந்து நின்று கொண்டான்.

ஆனால், இரண்டாவது முறையாக அந்தக் குளத்தின் மறுகோடியிலிருந்து எழுந்த அதே சலசலப்புச் சப்தம் அவன் கவனத்தை ஈர்த்து நிஜமாகவே அவனைப் பீதியடையச் செய்து விட்டது. சிற்றரவம் எழுந்த திசை பக்கம் தன் கட்புலனையும் செவி புலனையும் திருப்பிக் கூர்ந்து கவனி தான்.

குளத்தின் நேர் எதிரே, மறு பக்கக் கரையின் இடது மூலையில், ஐந்தாறு படிகளுக்குக் கீழேயுள்ள ஒரு படியில் மனித உருவம் ஒன்று நின்றிருப்ப தெரிந்தது. தேய்பிறை நிலவின் மங்கிய ஒளியில் அந்த உருவம் ஆணா பெண்ணா என்பதை அநுமானித்தறிய முடியவில்லையென்றாலும் அநேகமாக அது ஒரு பெண்ணாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றியது. அவ்வுருவம் நின்றிருந்த படிக்கும், குளத்து நீரின் விளிம்புக்கும் இடையே ஒரே ஒரு படிதான் இருந்தது. குளத்தின் அந்த மூலைப் பகுதியில் மட்டும் ஒரு வண்டிச் சக்கரச் சுற்றளவுக்குப் பாசி கொடியோ அதன் ஆரம்ப நுரைப்புக் கொப்புளங்களோ படிந்திராமல் ஸ்படிகத் தகடுபோல் நீர்ப் பரப்பு தூய்மையாய்த் தெரிந்தது. ஏதோ ஒரு மரக்கிளையின் நிழல், காற்றின் அசைவால் அவ்வப்போது அந்த உருவத்தை மறைத்தாலும், நிலவின் ஜீவனற்ற ஒளி அதைப் புலப்படுத்தி காட்டவே முயன்றது.

படபடக்கும் உள்ளத்துடன் அந்த உருவத்தையே பார்த்துக் கொண் நின்றான் மாறவர்மன். குளத்தைச் சுற்றி வளர்ந்து நின்ற நாலுவித மரங்கள் அதன் எந்த ஒரு கோணத்தையும் தெளிவில்லாமல் வைத்திருந்தன. ஒரு கரையில் நின்று பார்த்தால் மற்ற மூன்று கரைகளும் திட்டுத் திட்டாகத்தான் தென்படும். ஏனென்றால், மரக்கிளைகள் அப்படிச் சுற்றி கவிந்து சரிந்திருந்தன. மறு கோடியில் இருப்பவர்கள் இந்தக் கரைமேல் நிற்கும் மாறவர்மனை அத்தனை எளிதில் பார்த்துவிட முடியாது. ஆனால் அவன் எப்படியோ ஒரு குறுகலான கோணத்தின் வழியே தொலைதூரத்தில் நிற்கும் அந்த உருவத்தை பார்த்து விட்டான். அவனுடைய உடலும் உள்ளமும் தவிர்க்க முடியாத ஒருவித அச்சத்தால் லேசாக அசைய ஆரம்பித்தன. ஆயினும் அவ்வுருவத்தை அவன் தப்பவிடாமல் கவனி தான்.

இதுவரை தன் ஆடைகளைக் கவ வதுபோல் நின்றிருந்த அந்த உருவம் திடீரெனக் குளத்தில் குதித்து இ

சப்தம் பலமாகக் கேட்டது. தைத் தொடர்ந்து நீரின் அலை யாலிகளுக்கிடையே அந்த மனித ருவத்தின் தலை மட்டும் மேலே மூம்புவதும் நீருக்குள் அமிழ்வது ாகத் தெரிந்தது.

வியப்பால் வெலவெலக்க அந்த திரக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றான் சுந்தரபாண்டி ன்.

இதென்ன அதிசயம்! இரவின் ந்த மூன்றாம் ஜாம நேரத்தில், பனி ால் குளிர்ந்து சில்லிட்டுக் கிடக்கும் ந்தப் பாழடைந்த குளத்தில், பெண் ணனத் தோன்றும் ஓர் உருவம் னியே வந்து குளிப்பதா? ஜனங்கள் ல்லாசமாக நீராடுவதற்கென நெட் ரில் எத்தனையோ நல்ல குளங்கள் ருக்கின்றன. அதையெல்லாம் விட்டு ட்டு, பேயுறங்கும் இந்நேரத்தில், இந் ப் பாழ்பட்ட குளத்தில் வந்து, ஒரு பண் குளிப்பதென்றால்...?

நீரில் உளைந்து நீந்தி நிர்விசாரமாய்க் ளித்துக் கொண்டிருந்தது அந்த ருவம். அது செய்த அலைக்கழிப்பால் ாசிப் படலங்கள் ஓர் இரட்டைக் ணற்றின் வட்டத்திற்கு விலகிப் பாய் விட்டன. ஆனாலும், அவை ீண்டும் மீண்டும் அந்தப் பழைய பட்ட அளவில் குறுகி வருவதும், மறு படி விலகிப் போவதுமா யிருந்தன.

இந்தச் சமயத்தில், இங்கே காங்கே ன் இருந்தால் எவ்வளவு நல்லதா ருக்கும்! ஊருக்குள் போன அவன் ன்னும் திரும்பி வரவில்லை. மாற ர்மனின் சிந்தனை தீவிர கதியில் இயங்கியது.

இப்போது என்ன செய்யலாம்? எப்படியும் அங்கே குளிப்பது யார் ன்று அறிந்தே ஆகவேண்டும். அறியாமல் விடத்தக்க விஷயமல்ல து. ஆனால், அங்கே எப்படிப் போவது? போனால் என்ன நடக்கும்?

நேராகவே எதிரில் போய் நின்று யார்?' என்று அதட்டிக் கேட்க வேண்டுமென ஆண்மை பொங்கும் அவனுடைய வாலிப உள்ளம் திமிறி து. உடனே, நான்கு நாட்களுக்கு ன், இதே மாதிரி இரவு நேரத்தில், கார்த்திகைப் பெருஞ்சாலையில் கழ்ந்த சம்பவங்கள் ஒன்றன் பின் ன்றாக அவன் மனத்திரையில் தான்றி அவனை எச்சரித்தன. அவ சர வீரத் துடிப்பு அடங்கப் பெற்ற வனாய் தான் நின்றிருந்த இடத்தை விட்டு மெள்ள நழுவி, மரஞ் செடி கொடிகளிடையே, ஓசைப்படாமல் குளத்தின் மறு கோடிக் கரையை நோக்கி ஒளிந்து மறைந்து நடந் சென்றான் மாறவர்மன்!

உச்சி வானில் ஒட்டிக் கொண் டிருந்த மூளிச் சந்திரன் மேற்றிசை யில் கொஞ்சமாகச் சரிந்தது. அழகிய இளம் பெண்கள்தான் ஆண் களைக் காண வெட்கப்பட்டுக்கொண்டு ஓடி ஒளிவார்கள்; ஆடிப்பாடி ஓய்ந்த கிழவிகளுக்கு ஆடவர்களும் ஒன்று தான், ஆட்டுக்கல்லும் ஒன்றுதான். இதுபோலவே, வாலைக் குமரிபோன்ற வளர்பிறைச் சந்திரன் பகலோனைப் பார்ப்பதே இல்லை; விடிவதற்குள் அது ஓடி ஒளிந்துகொள்ளும்—கதிரவ னைக் காண அதற்கு அத்தனை வெட் கம்! ஆனால், இந்த வெட்கங்கெட்ட கிழவி போன்ற தேய்பிறை நிலவோ, சௌந்தர்ய ஜோதிரூபனான அருணன் உதித்த பின்பும், தன் ஒடுக்கு விழுந்த முகத்தையும் பொக்கை வாயையும் காட்டிப் பால்யக் கனவுடன் சிரிக் கும்!......கிழக்கில் தகத் தகாயமாய் ஏறி நிற்பான் சூரியன்; மேற்கில் கூனிக் குறுகி எட்டிப் பார்ப்பாள் தேய்ப்பிறைச் சந்திரிகை. என்ன வெட்கக் கேடு!...... இந்த வெட்கக் கேட்டை விளங்கிக் கொள்ளாத அதே முதுமைச் சந்திரிகைதான், மூன்றாம் ஜாமம் முடிவடையப் போகும் இந்த நேரத்திலும், உச்சிவானை விட்டுக் கீழே இறங்க விரும்பாமல் இன்னும் ஜாலம் செய்துகொண்டிருந்தது!

கல்லும் முள்ளும் கால்களை உறுத்த இருட்டில் தட்டுத் தடுமாறியபடி குளத்தின் வலப் பக்கமாகச் சுற்றிக் கொண்டு மறுகோடிக் கரையை நெருங்கிக் கொண்டிருந்தான் மாறவர் மன். சுற்று முற்றும் ஜாக்கிரதை யாகக் கவனித்துச் சென்ற அவன், சற்றுத் தொலைவில் சிறிய மரங்களால் சூழப்பெற்ற குள்ளமான கல்மண்ட பம் ஒன்று இருளில் கன்னங்கரே லென நிற்பதைக் கண்டு தயங்கி நின் றான். குளத்தின் வெளிக்கரைச் சரி வில் அந்த மண்டபம் தாழ்வாக அமைந்திருந்ததால், அடுத்த கரையிலி ருந்து பார்த்தபோது இவ்வளவு நேரம் அது தெரியாமலிருந்திருக்கிறது.

நிச்சயம் அது ஒரு பாழ்மண்டப மாகத்தான் இருக்கவேண்டும். இல்லை